Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

11 MAY 2004

உலகின் எப்பாகத்திலிருந்தும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

மூலம்

தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்

- வங்கிக்கணக்கு அவசியமில்லை
- கமிஷன் ஏதுமில்லை
- 365 நாட்களிலும் எந்நேரத்திலும்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk

சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 20 (11.05.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :222

## சமாதான முயற்சிகள் குறித்து

# ஜனாதிபதி - பிரதமரைச் சந்தித்து நோர்வே தூதுக்குழுவினர் பேச்சு!

## இன்று பிரபாகரனுடன் சந்திப்பு

(கொழும்பு)

**நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான சமாதானத் தூதுக் குழுவினர் நேற்றுமாலை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி சந்திரிகா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.**

நேற்றுக்காலை 11.35 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த நோர்வேயின் சமாதானத் தூதுக் குழுவினர் நேற்று மாலை 4.40 மணியளவில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுக்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது, நோர்வே மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் நேற்றிரவு ஏழு மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து நோர்வே தூதுக்குழுவினர் பேச்சுக்களை நடத்தினர்.

இந்தச் சந்திப்பின்போது, இன்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை வன்னியில் சந்தித்து நடாத்தவுள்ள பேச்சுக்கள் குறித்த விடயங்கள் பற்றி பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இந்தச் சந்திப்பில் என்ன விடயம் பற்றிப் பேசப்பட்டது என்பது குறித்து ஜனாதிபதி செயலகம் உத்தியோக பூர்வமாக எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

இன்று விடுதலைப் புலிகளின் தலைவருடன் நடத்தவுள்ள பேச்சுக்களின் போது, அவர்களால் குறிப்பிடப்படும் விடயங்கள் குறித்து கொழும்பு திரும்பியவுடன் ஜனாதிபதியை சந்தித்து கூறவுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனுடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் கொழும்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(01)

# பாதுகாப்பு நடவடிக்கை மட்டக்களப்பில் தீவிரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து பொலிஸார் சோதனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் தாண்டவன் வெளியில் பஸ்ஸில் பயணம் செய்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் சுடப்பட்ட சம்பவத்திலும், விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரி மீது நடத்தப்பட்ட கிரனைட் வீச்சு ஆகியவற்றைத் தொடர்ந்தே, இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

கல்முனை வாடிவீட்டுச் சந்தி, வைத்தியசாலைச் சந்தி ஆகிய இடங்களில் பொலிஸார் வாகனங்களை மறித்து சோதனையிட்டு வருகின்றனர்.

## நிவாரண முத்திரைகள் வழங்குவது குறித்து முடிவில்லை!

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களுக்கான மாசி மாத நிவாரண முத்திரைகள் வழங்குவது தொடர்பாக இதுவரையில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் எடுககப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த ஜனவரி மாத நிவாரண முத்திரைகளுக்கான பொருட்கள் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் நிலையில், அந்தந்த மாதங்களுக்கான நிவாரண முத்திரைகள் வழங்குவது தொடர்பான அறிவுறுத்தல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக அரசாங்க அதிபர், உரிய அதிகாரிகளுடன் பேச்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மற்றும் பிரதமருடனான பேச்சுக்களில் ஈடுபட்ட நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன்.



நோர்வேத் தூதுக்குழுவினர் - ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது...



பிரதமருடனான சந்திப்பின்போது ஜான் பீற்றர்சன்.

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கடந்த சில நாட்களாக நடைபெற்ற தாக்குதல் சம்பவங்களை அடுத்து பொலிஸார் சோதனை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் தாண்டவன் வெளியில் பஸ்ஸில் பயணம் செய்த இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் சுடப்பட்ட சம்பவத்திலும், விசேட அதிரடிப் படை முகாம் அதிகாரி மீது நடத்தப்பட்ட கிரனைட் வீச்சு ஆகியவற்றைத் தொடர்ந்தே, இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக் கப்பட்டுள்ளன.

கல்முனை வாடிவீட்டுச் சந்தி, வைத்தியசாலைச் சந்தி ஆகிய இடங்களில் பொலிஸார் வாகனங்களை மறித்து சோதனையிட்டு வருகின்றனர்.

அத்துடன், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரும் மக்களும் தீவிர சோதனைக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாத நிவாரண முத்திரைகளுக்கான பொருட்கள் தற்பொழுது வழங்கப்பட்டுவரும் நிலையில், அந்தந்த மாதங்களுக்கான நிவாரண முத்திரைகள் வழங்குவது தொடர்பான அறிவுறுத்தல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லையென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக அரசாங்க அதிபர், உரிய அதிகாரிகளுடன் பேச்

(12 ஆம் பக்கம் பார்க்க)



பிரதமருடனான சந்திப்பின்போது ஜான் பீற்றர்சன்.

# கிழக்கு நிலை குறித்து ஆராய மட்டக்களப்பில் இன்று கூட்டம்!

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தண்டவன் வெளியில் வைத்து - இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக - அடுத்த இரண்டு நாட்களுக்குள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்தத் தகவலை இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ட்ரொன் புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

கிழக்கு மாகாணப் பாதுகாப்பு நிலைமை தொடர்பாக நேற்று இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னரே மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நேற்று இராணுவத் தலைமையகத்தில் நடந்த உயர்மட்டபாதுகாப்பு மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல, விமானப் படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் டொனால்ட் பெரேரா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோருடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டேயும் கலந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது - மட்டக்களப்பு தாண்டவன் வெளியில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன், கிழக்கில் பாதுகாப்பு நிலையை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பின் பின்னர் - கருத்து வெளியிட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே-

இந்தச் சந்திப்பில் - பேசப்பட்ட விடயங்கள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தெளிவுபடுத்தவுள்ளோம்.

கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை மிகவும் மோசமானது. இது யுத்த நிறுத்த உடன்படிக்கையைப் பாதிக்கக்கூடியது. இத்தகைய சம்பவங்களை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்? எவ்வாறு தடுக்கலாம்? என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. என மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நிலைமைகள் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளை ஆட்சேர்க்கும்

# நிதியமைச்சின் சுற்று நிருபம் யாழ்.செயலகம் வந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளை அரசதுறைகளில் ஆட்சேர்ப்பது தொடர்பாக, நிதியமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்றுநிருபம் நேற்றுமாலை யாழ்.செயலகத்திற்கு கிடைத்தது.

கடந்த இரண்டாம் திகதி அனுப்பி வைக்கப்படுவதாக இருந்த இந்தச் சுற்றுநிருபம் நேற்றே யாழ்.செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இது உடனடியாக அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தின்படி, பட்டதாரிகளால் தயாரிக்கப்பட்ட சுயவிபரக்கோவைகள் தத்தமது பிரதேச செயலர் பிரிவுகளில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட சுயவிபரக்கோவையை பிரதேச செயலகம் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும்வகையில் அத்தாட்சிப்பத்திரம் ஒன்று வழங்கப்படும்.

தொடர்ந்து பட்டதாரிகளின் விபரங்களை உறுதிசெய்யும் வகையில் அந்தந்தப் பிரதேச செயலர்களால் நேர்முகப்பரீட்சை ஒன்று நடத்தப்படும்.

அதன்பின்னர் - பட்டதாரிகளின் விபரங்கள் யாவும் நிதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களின் ஊடாக பட்டதாரிகளுக்கான பயிற்சித்துறைகள் தீர்மானிக்கபபட்டு அவர்கள் அரசதுறைகளுக்குள் உள்வாங்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)



எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2[illegible]349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR
Your friend in the skies...

(சி/2489)

# மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு - கிழக்கு மாகாணசபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (கார்ப்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

**"ஆஅவ" கடன் இல. 2043 - SRI (SF)**

**யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் இல: 01**

1. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்ட (CAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆஅவ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்து தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/CAARP/ED/01 | யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் 90'x 25' அளவுடைய இரண்டுமாடி விஞ்ஞான ஆய்வுகூடம் மீளமைத்தல். | M6 | 52,000/- |
| 02 | JF/CAARP/ED/02 | யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் 70'x 25' அளவுடைய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் திருத்துதல். | M8 | 10,000/- |
| 03 | JF/CAARP/ED/03 | அச்சுவேலி மத்திய கல்லூரியில் 110'x 25' அளவுடைய இரண்டு மாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M7 | 43,000/- |
| 04 | JF/CAARP/ED/04 | வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 130'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M7 | 49,500/- |
| 05 | JF/CAARP/ED/05 | இடைக்காடு மகா வித்தியாலயத்தில் 70'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், ஆசிரியர் விடுதி புனரமைத்தலும். | M7 | 41,000/- |
| 06 | JF/CAARP/ED/06 | ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் 130'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M7 | 49,500/- |
| 07 | JF/CAARP/ED/07 | கரவெட்டி விக்கினேஸ்வரா் கல்லூரியில் 110'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், நூலகக் கட்டடம் புனரமைத்தலும். | M6 | 52,500/- |
| 08 | JF/CAARP/ED/08 | பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாலயத்தில் அதிபர் அலுவலகம், நூலகம் உள்ளடங்கலாக 90'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M7 | 35,000/- |
| 09 | JF/CAARP/ED/09 | தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் 110'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தலும், பிரார்த்தனை மண்டபம் திருத்துதலும். | M6 | 54,500/- |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   - i) நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல், வேண்டும்.
   - ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ('இக்ராட்'டுடன் M7 இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   - iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.
   - iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.
   - v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
   - vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றிற்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விபரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி : 021 - 2223625, தொலைநகல்: 021 - 2225163.
6. ஒப்பந்த ஆவணங்கள் மே மாதம் 17 ஆம் திகதி முதல் யூன் மாதம் 7 ஆம் திகதி வரை முற்பகல 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி, மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்ட கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்" த்திற்கு யூன் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள், திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் யூன் மாதம் 8 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர், மாவட்ட கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர்**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-2513)

## சமாதானப் பேச்சுவார்த்தைகளில்

# முஸ்லிம் காங்கிரஸ் வேண்டாமென அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறதாம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது முஸ்லிம் காங்கிரஸை இணைத்துக்கொள்ள வேண்டாமென ஐக்கிய மக்கள் சுதந்திர முனணிக்குள் சில தரப்பினர் அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிய வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா முஸலிம் காங்கிரஸை இணைத்துக்கொள்ளக் கூடாதென ஐக்கிய மக்கள் சுதநதிர முன்னணியின் அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்தார்.

தம்மால் தெரிவுசெய்யப்படும் ஒரு பிரதிநிதிகள் குழுவை பேச்சுவார்த்தைகளில் இடம்பெறச் செய்வற்கான முயற்சிகளை முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி செய்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள அலவி மௌலானா, பேச்சுவார்த்தைகளின் போது அரசியல் சார்பில்லாத ஒரு சுயாதீனமான முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவே இடம்பெறவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

அத்துடன், இப்பிரதிநிதிகள் குழுவில் இஸ்லாமிய மார்க்கத் தலைவர்களும் இடம்பெறவேண்டும் எனவும் அவர் விருப்பம் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளுமே பிரதான பங்காளிகளாக இருக்கமுடியும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெலிக்கடைச் சிறையில்

# முப்பத்தைந்து சிறைக்கைதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் சாகும்வரையிலான உண்ணா நோன்பிருப்போரின் எண்ணிக்கை 35 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த 3 நாட்களாக வெலிக்கடைச்சிறையிலுள்ள ஆயுள் தண்டனைக் கைதிகள் 10 பேர் தமது தண்டனையைக் குறைக்குமாறு கோரி, சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்திருந்தனர்.

இவர்களுக்கு ஆதரவு வழங்குமாறு ஏனைய கைதிகளிடம் அவர்கள் கோரியிருந்தனர். இத்னடிப்படையில் நேற்றுமுன்தினம் அவர்களுடன் மேலும் 25 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

இவர்களது உண்ணாவிரதப் போராட்டத்தினை நிறுத்துமாறு கோரி - நேற்றுமுன்தினம் கைதிகளுடன் சிறைச்சாலை ஆணையாளர் பேச்சுக்களை நடாத்தியபோதும், கைதிகள் அவறறை ஏற்றுக்கொள்ளவில்லையெனத் தெரிகிறது.

இதனையடுத்து, சிறைச்சாலை நிர்வாகம் நீதி அமைச்சுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

(01)

# இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பலாலி விமானத்தளம் புனரமைப்பு

இந்திய அரசின் உதவியுடன் பலாலி இராணுவமுகாமின் விமானத்தளம் நவீனமுறையில் புனரமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பலாலி விமானத்தளத்துக்கான அபிவிருத்தி நிதியாக சுமார் 40 மில்லியன் இந்திய ரூபாவை நிதியுதவியாக வழங்குவதற்கு இந்திய அரசு முன்வநதுள்ளது.

இதேவேளை, இந்த விமானத்தளத்தை இலங்கையைத் தவிர வேறு எந்த நாடுகளும் பயன்படுத்தக்கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்த நிதியுதவியை இந்தியா வழங்கவுள்ளதாகவும் தெரியவருகிறது.

பலாலி விமானத்தளத்தின் புனரமைப்புக்கு உதவியளிப்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலம் முழுவதும் ஆராயப்பட்டு வந்தது.

இந்த நிலையில், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் இந்திய விஜயத்தின்போதே இது தொடர்பான இறுதியான முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஐ.தே.க. தலைவர் பதவியிலிருந்து ரணிலை அகற்றச் சதித்திட்டம்

## திலங்க சுமதிபால பின்னணியில்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அகற்றுவதற்கு, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவுடன் எடுக்கப்பட்ட சதிமுயற்சி ஒன்று முறியடிக்கப்பட்டுவிட்டதாகக் கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

முன்னாள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவரும், சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் முகாமையாளருமான திலங்க சுமதிபாலவின் துணையுடன் இந்த சதி நடவடிக்கையை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முன்னெடுத்தது.

பொது தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்த பின்னர், கட்சியின் தலைவர் பொறுப்பிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை அகற்றி - கட்சியைப் பலவீனப்படுத்திவிட்டு, குறிப்பிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குக் கட்சி மாறச் செய்து, தனது அரசாங்கத்தைப் பெரும்பான்மைப் பலமுள்ளதாக மாற்றுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கட்சியிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை விலக்குவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவித்தன.




தமிழர் புனர்வாழ்வுக் கிளையின் அமெரிக்க கிளையினர் நடாத்திய உதயம் - 2004 இன்னிசை மாலை நிகழ்சின் சில காட்சிகள்

# அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்து இறுதிமுடிவு விரைவில் அறிவிக்கப்படும்

## தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பான கட்சியின் இறுதி முடிவு விரைவில் அறிவிக்கப்படுமென பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்தது.

புதிய நாடாளுமன்றத்தின் இரணடாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இந்தத் திகதிக்கு முன்னரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் இறுதிமுடிவு வெளியாகும் என நம்பப்படுகிறது.

ஜனாதிபதிக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவா ஆறுமுகம் தொணடமானுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது, தமது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குமாறு ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஜனாதிபதிக்கும், ஆறுமுகம் தொண்டமானுக்கும் இடையிலான இச்சந்திப்பு தொடாபாக கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் ஒருவர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விரைவில் தம்முடன் இணைவதற்கான ஒரு முன்னறிவிப்பே இப்பேச்சுவார்த்தை எனக் கூறியிருந்தார்.

இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உத்தியோக பூர்வமாகக் கருத்து எதனையும் இதுவரை தெரிவிக்காதநிலையில், விரைவில் இந்த விடயம் தொடர்பான காங்கிரஸின் முடிவு வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பஞ்சவர்ண நரியார் பாடசாலைகளில் மேடையேற்றம்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்க இயக்க தயாரிப்பில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'பஞ்சவர்ண நரியார்' சிறுவர் நாடகம் - யாழ். மாவட்டத்திலுள்ள 100 பாடசாலைகளில் மேடையேற்றப்படவுள்ளது.

'பஞ்சவர்ண நரியார்' நாடகத்தை மேடையேற்ற விரும்பும் ஆரம்பப் பாடசாலைகள், செயல்திறன் அரங்க இயக்கம், 'அருளகம்', ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என செயல்திறன் அரங்க இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

# மேல்கொத்மலை திட்டத்தை எதிர்த்து தலவாக்கலையில் ஆர்ப்பாட்டம்

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலையில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தால் மலையக மக்களுக்கு நன்மையைவிடத் தீமையே அதிகமெனத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியைக் கண்டித்தும் தலவாக்கலைப் பகுதியில் ஓர் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றுள்ளது.

இவ்விரு ஆர்ப்பாட்டப் பேரணியிலும் கலந்துகொண்டோர் தமக்கிடையே ஏற்பட்ட கருத்து மேதலால் கைகலப்பில் ஈடுபட முனைந்தவேளை, அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைந்து செல்லச் செய்துள்ளளர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் மலையக மக்கள் முன்னணியினரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்தோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(01)

# மட்டக்களப்பு படுகொலைகள்; கண்காணிப்புக்குழு விசாரணை!

## பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அணமைக்காலமாக இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விரிவாக ஆராய்ந்து வருகிறது.

இந்தத் தகவலைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயர் வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டு வருகிறது.

தன்னாமுனையில் வைத்து விடுதலைப புலி உறுப்பினர்கள் இருவர், சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட, புலிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறு, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கண்காணிப்புக்குழுவுக்கு கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த அடிப்படையிலேயே விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகடோட்ரயர் தெரிவித்தார்.

# தேசிய அரசாங்கம் அமைக்க திரைமறைவில் முயற்சிகள்

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கான திரைமறைவு முயற்சிகள் இடம்பெற்று வருவதாகச் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதிக்கு நெருக்கமான ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் தலைமையிலேயே இந்த நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடனேயே இதுகுறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இந்த யோசனை தொடர்பான உறுதியான நிலைப்பாடுகளை குறுகிய காலத்திற்குள் எட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத் தகவல்கள் தெரிவித்தன.

இலங்கையில் தேசிய அரசு ஒன்று நிறுவப்படுமானால் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா நேரடியாகப் பங்கு பற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுமென அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தேசிய அரசு ஒன்றை அமைப்பது தொடர்பாக முன்னரும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவை முறையாகக் கைகூடாமல் பிசுபிசுத்துப் போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# எனது உலக சாதனையை விடவும் உலகக்கிண்ண வெற்றியே பெரிது!

## முரளிதரன் கூறுகிறார்



டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலகசாதனை படைத்ததைவிட 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கோப்பையில் இலங்கை அணி பெற்ற வெற்றிதான் மிகப் பெரிய சாதனை என்று சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தெரிவித்தார்.

ஹராரேயில் நடைபெற்று முடிந்த சிம்பாப்வே அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின்போது டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் என்ற புதிய உலகசாதனையை முரளிதரன படைத்தார்.

மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்நத முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான கொட்னி வோல்ஷ் ஏற்படுத்தியிருந்த 519 விக்கெட்டுக்கள் உலகசாதனையை முரளிதரன் முறியடித்தார். சிம்பாப்வே அணிக்கெதிரான முதல் டெஸ்ட்டின் முடிவில் 521 விக்கெட்டுக்களுடன் முரளிதரன் இருக்கிறார்.

இந்த நிலையில் தன்னுடைய உலகசாதனையைவிட, இலங்கை அணியின் உலகக்கோப்பை வெற்றிதான் மிகப்பெரியது என்று முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முரளிதரன் அளித்த பேட்டியில் தெரிவித்திருப்பதாவது -

உலகக்கோப்பை என்பது முற்றிலும் வித்தியாசமானதாகும். அதை யாராலும் மறக்கமுடியாது. அது ஒரு அபாரமான விடயம். எனவே என்னுடைய இந்த தனிப்பட்ட சாதனையைவிட உலகக்கோப்பை வெற்றியே மிகப் பெரியதாகும்.

ஏனெனில் இந்தியா, அவுஸ்ரேலியாவை போல இலங்கை பெரிய நாடு அல்ல. எனவே இந்த உலக சாதனையானது இலங்கைக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தரும்.

இந்த உலகசாதனையானது நிறைய இளைஞர்களை கிரிக்கெட் விளையாட்டின் பக்கம் ஈர்க்கும். என்றாவது ஒருநாள் நாமும் இந்த நிலைக்கு உயர்வோம் என்ற நம்பிக்கையை இளம் வீரர்களுக்குக் கொடுக்கும்.

உலகசாதனை புரிந்திருப்பது என்பது ஒரு அற்பமான விடயம். 519 விக்கெட்டுக்களுடன் நான் இருந்தபோது மிகவும் பதற்றமாக இருந்தேன். ஏனெனில் விக்கெட்டுக்களை வாஸும், சொய்சாவும் அடுத்தடுத்து வீழ்த்திக்கொண்டிருந்தனர்.

ஒருநிலையில் சிம்பாப்வே அணி 18 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 5 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

இவர்கள் இருவரும் தொடர்ந்து பந்து வீசியிருந்தால், இன்னிங்ஸை அவர்களே முடித்திருப்பார்கள்.

ஆனால், தான் பந்து வீசுவதை நிறுத்திக்கொள்வதாகவும், முரளிதரனை பந்துவீச அழைக்கும்படியும் கப்டனிடம் வாஸ் கூறியதால் எனக்கு விக்கெட்டை வீழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தது.

இதற்காக கப்டன் அத்தப்பத்து, வாஸ் இருவருக்குமே எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1988 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிராக ஓவலில் நடைபெற்ற போட்டியில் 221 ஓட்டங்களைக கொடுத்து 16 விக்கெட்டுக்களை வீழ்த்தியதே எனது சிறப்பம்சம்.

என்னுடை கிரிக்கெட் வாழ்வு சிறப்பாக நடைபெற எத்தனையோ பேர் உதவியிருந்தாலும், ரணதுங்கவிற்கு அதிக இடம் இருப்பதாக முரளிதரன் தெரிவித்தார்.

# முரளியின் இலக்கு 800 விக்கெட்டுக்கள்!

## இந்திய சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே



சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலகசாதனை படைத்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகவும், அனேகமாக 800 விக்கெட்டுக்களை டெஸ்ட் போட்டிகளில் வீழ்த்துவ்து முரளிதரனின் குறிக்கோளாக இருக்கலாம் என்றும் இந்திய கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே தெரிவித்தார்.

இதுகுறித்து அனில் கும்ளே அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டிருப்பதாவது -

இலங்கையைச் சேர்ந்த வீரர் ஒருவர் இந்த சாதனையை ஏற்படுத்தியிருப்பது மிகப்பெரிய விடயம்.

இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக பல ஆண்டுகளாக முரளிதரன் இருந்து வருகிறார்.

அதிலும் குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர் ஒருவரால் உலகசாதனை ஏற்படுத்தப்பட்டிருப்பது சிறந்த ஒன்றாகும்.

521 விக்கெட்டுக்களோடு முரளிதரன் நின்றுவிடமாட்டார் என்பதை மட்டும் என்றால் உறுதியாகக் கூற முடியும். அனேகமாக அவர் டெஸ்ட் போட்டிகளில் 800 விக்கெட்டுக்களை இலக்காகக் கொண்டிருப்பார்.

ஒட்டுமொத்தத்தில் சுழற்பந்து வீச்சாளர் ஒருவர் இந்த சாதனையைப் படைத்திருக்கிறார் என்பதில் எனக்கு மகிழ்ச்சியே. முரளிதரன் என்னுடைய நல்ல நண்பர். அவரது சாதனைக்கு எனது வாழ்த்துக்கள் எனவும் தெரிவித்தார்.

# விளையாட்டு

## வீரர்களின் சர்வதேச ஒப்பந்த விடயத்தில்

# இந்தியக் கிரிக்கெட் சபை கவனமாக இருக்குமாம்!

## டால்மியா தெரிவிப்பு

கிரிக்கெட் வீரர்களுக்கான சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒப்பந்த விடயத்தில், இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இம்முறை மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கும் என அதன் தலைவர் டால்மியா தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒப்பந்த விவகாரத்தால், கடந்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற உலகக்கோப்பை போட்டியில் இந்திய அணி விளையாடுவதே சிக்கலாகிவிட்டது. எனவே இனியும் இந்தப் பிரச்சினை ஏற்படக்கூடாது. இந்தப் பிரச்சினையிலிருந்து இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களைக் காப்பாற்ற கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒப்பந்த விடயம் குறித்து அடுத்த ஆண்டு மீளாய்வு செய்யப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஸ்பொன்ஸர் ஒப்பந்தத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வீரர்களான சச்சின் டெண்டுல்கர், ராகுல் ராவிட், வீரேந்தர் ஷேவாக், சௌரவ் கங்கூலி ஆகியோர் கையெழுத்திட மறுத்ததால் கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கோப்பை போட்டிக்கு முன்னர் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

இந்தச் சர்ச்சை மிகப்பெரியளவில் உருவாகியதை அடுத்து, கடைசியாக நிபந்தனைகளுடன் இந்த ஒப்பந்தத்தில் வீரர்கள் கையெழுத்திட்டனர்.

ஆனால், ஒப்பந்த விதிகளை மீறியதால் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தங்களுக்கு நஷ்டஈடாக 220 கோடி ரூபாவைத் தர வேண்டும் என்று குளோபல் கிரிக்கெட் சங்கம் கோரியது.

2007 ஆம் ஆண்டுவரை சர்வதேச கிரிக்கெட் சபை சார்பாக நடைபெறவுள்ள போட்டிகளுக்கு குளோபல் கிரிக்கெட் சங்கமே உரிமம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் டால்மியா கூறுகையில் -

ஸ்பொன்ஸர் ஒப்பந்த விடயத்தில் எதிர்காலத்தில் மிகவும் கவனத்துடன் இருக்கத் திட்டமிட்டுள்ளோம். கிரிக்கெட் வீரர்களின் நலனைப் பாதுகாக்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும். நடந்த தவறு மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்வோம் எனத் தெரிவித்தார்.

## ஜேர்மன் ஓபன் ரெனிஸ்:

# இறுதிப் போட்டியிலிருந்து வீனஸ் வில்லியம் விலகல்!

ஜேர்மன் ஓபன் ரெனிஸ் இறுதிப் போட்டியிலிருந்து வீனஸ் வில்லியம் விலகியதை அடுத்து, அமெலி மொரேஷ் மோ சாம்பியனாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பேர்ளினில் நடைபெற்றுவரும் ஜேர்மன் ஓபன் ரெனிஸ் போட்டியின் இறுதிப்போட்டியிலிருந்து கணுககால் வலி காரணமாக வீனஸ் வில்லியம் விலகினார்.

இதனால் இறுதிப்போட்டிக்குத் தகுதிபெற்ற மற்றொரு வீராங்கனையான பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அமெலி மொரேஷ்மோவுக்கு சாம்பியன் பட்டம் வழங்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கரோசியாவைச் சேர்ந்த இளம் வீராங்கனையான கரோலினா ஸ்பெரம்மிற்கு எதிரான அரையிறுதிப் போட்டியின் போது வீனஸ் வில்லியம்ஸின் கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

இந்தப் போட்டியில் 2-6, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் வீனஸ் வில்லியம்ஸ் வெற்றிபெற்றிருந்தார்.

இந்நிலையில் இறுதிப் போட்டியிலிருந்து வீனஸ் வில்லியம்ஸ் விலகியதால் மொரேஷ்மோ சாம்பியன் பட்டத்தை வென்றார். அரையிறுதிப் போட்டியில் 6-2, 6-0 என்ற செட் கணக்கில் ஜெனீபர் கேப்ரியாட்டியை வீழ்த்தி அமெலி மொரேஷ்மோ இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.

# கிரிக்கெட் போட்டியில் 100 நாடுகளை பங்கேற்க வைப்பதற்கு ஐ.சி.சி. திட்டம்!

2005 ஆம் ஆண்டு முடிவடைவதற்குள் 100 நாடுகளை கிரிக்கெட் விளையாட்டில் பங்கேற்கவைக்க சர்வதேச கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது. சர்வதேச அளவில் டெஸ்ட் போட்டிகளில் 10 நாடுகள் மட்டுமே விளையாடிவருகிறது.

கிரிக்கெட் என்பது தனிச் சிறப்பு மிக்க விளையாட்டு. எனவேதான் அதனை உலகமயமாக்க சர்வதேச கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளது என சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் ஈஷான்மணி தெரிவித்தார்.

இது குறித்து ஈஷான்மணி மேலும் தெரிவிக்கையில் -

கடந்த 52 ஆண்டுகளில் 4 நாடுகளுக்கு மட்டுமே டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. பாகிஸ்தான், இலங்கை, சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய நாடுகளே கடந்த 52 ஆண்டுகளில் டெஸ்ட் அந்தஸ்து பெற்றன. இதில் பங்களாதேஷ் அணி படுமோசமாக விளையாடி வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் அரையிறுதிக்கு முன்னேறி வியப்பளித்த கென்யா, டெஸ்ட் அந்தஸ்து பெற விண்ணப்பித்திருந்தாலும் 2005 ஆம் ஆண்டுவரை கென்யாவின் விண்ணப்பம் நிறுத்தி வைக்கப்பட்டு, கென்யாவில் கிரிக்கெட் விளையாட்டு மேலும் வளர்ச்சி பெற சுமார் இரண்டரை கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# இலங்கை - பாகிஸ்தான் போட்டிகள் திட்டமிட்டுள்ளவாறு நடைபெறுமாம்!

## மலேசிய கிரிக்கெட் சங்கத் தலைவர் தெரிவிப்பு

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடர் எதிர்வரும் 27 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் மலேசியாவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் போட்டி திட்டமிட்டபடி நடைபெறுமா என்பதில் முன்னர் சந்தேகம தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் போட்டியை நடத்தும் மலேசிய கிரிக்கெட் சங்கத் தலைவர் துக்னு இம்ரான் - பாகிஸ்தானின் லாகூர் நகரில் நடைபெறும் ஆசிய கிரிக்கெட் சபையின் கருத்தரங்கில் கலந்துகொண்டு கூறியதாவது - இலங்கை - பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகளுக்கு உத்தரவாதத் தொகையை வழங்கிவிட்டோம்.

போட்டிக்கு முக்கிய ஸ்பொன்சர் கிடைக்கவில்லை. இந்தப் போட்டியை பிற்போட நேர்ந்தாலும் நடத்துவதில் உறுதியாக இருக்கிறோம் எனத் தெரிவித்தார்.

# எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை!

## கிறீஸின் கலாசார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தீவிரவாதிகளினால் எந்தவித பாதுகாப்பு அச்சுறுத்தலும் இல்லையென கிரிஸ் நாட்டு கலாசாரதுறை துணை அமைச்சர் தெரிவித்தார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி இம்முறை கிரிஸ் நாட்டின் தலைநகர் எதென்ஸில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 13 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதிவரை நடைபெறவிருக்கிறது.

இந்தப் போட்டியில் உலகம் முழுவதிலுமிருந்து 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள்.

போட்டி தொடங்க இன்னும் மூன்றே மாதங்கள் இருப்பதால் ஸ்ரேடியம் மற்றும் தங்கும் இடத்துக்கான பணிகள் இரவு - பகலாகத் தொடர்நது நடைபெற்று வருகிறது.

அண்மையில் கிரிஸ் நாட்டின் தலைநகர் ஏதென்ஸின் சில இடங்களில் வெடிகுண்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருந்ததால், ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீர - வீராங்கனைகளுக்கு தீவிரவாதிகளால் அசம்பாவிதம் ஏதும் நடைபெறாமல் தடுக்க அந் நாட்டு அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனித்துவரும் கிரிஸ் நாட்டு கலாசாரதுறை துணை அமைச்சர் இதுகுறித்து தெரிவிக்கையில் -

எதென்ஸில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கு எதிராக எந்தவொரு தாக்குதல் நடைபெறுவதற்கும் சாத்தியம் இல்லை.

அவ்வாறு நடைபெற்றாலும் அதை முறியடிக்கக்கூடிய போதுமான பாதுகாப்பு வசதிகள் நிச்சயம் மேற்கொள்ளப்படும்.

எந்தவொரு நாடும் தங்கள் அணி வீரர்களுக்கு பாதுகாப்பாக ஆயுதம் தாங்கிய பொலிஸாரை அழைத்துவர எங்களிடம் அனுமதி கேட்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை - ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் வீர - வீராங்கனைகள் அனைவரும் ஒரேயிடத்தில் தங்குவதற்காக, நவீன வசதிகளுடன் கூடிய ஒலிம்பிக் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பணிகள் முடிந்து ஜூலை 23 ஆம் திகதி ஒலிம்பிக் கிராமம் திறக்கப்படும் என்று கூறப்படுகிறது.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## முதலாவது அகவையில்



பெயர் : ப.நிதர்சனா
முகவரி : அக்கரைப்பற்று.

## இரண்டாவது அகவையில்



பெயர் : சி.லக்ஷன்
முகவரி : தொண்டைமானாறு.

## நான்காவது அகவையில்



பெயர் : மா.தர்சிகா
முகவரி : சுண்டுக்குளி.

## ஆறாவது அகவையில்



பெயர் : ஜெ.தாட்சாயினி
முகவரி : இமையாணன் கிழக்கு.

## ஏழாவது அகவையில்



பெயர் : அ.அருண்குமார்
முகவரி : நவாலி.

## பத்தாவது அகவையில்



பெயர் : சு.அபிராம்
முகவரி : யாழ்ப்பாணம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------------
முகவரி :------------------------
பிறந்த ஆண்டு:------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றோர் ஒப்பம்

# தீவகத்திற்கான உடனடித்தேவைகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைப்பு

தீவுப்பகுதிகளில் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டிய தேவைகள் குறித்து, கடந்த வியாழக்கிழமை ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற தேர்தல் செயற்பாட்டுக்குழுவினர் மாநாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது.

தீவகத்திற்கென போட்டியிட்ட வேட்பாளர் தெரிவுசெய்யப்படாமையினால் தற்போதுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரைத் தீவுப்பகுதியின் பிரதிநிதியாக நியமிப்பதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் ஒன்றும் தீவகப்பிரதேசத்தில் அமைக்கப்படவேண்டும்.

தீவகங்களில் பெரும்பாலானவை கடற்போக்குவரத்தை நம்பியே இருக்கின்றன. இதற்கெனச் சீரான பாதுகாப்பான படகு சேவை நடாத்தப்படவேண்டும். குமுதினிப்படகு திருத்தம் தொடர்பாகவும் உடன் நடவடிக்கை எடுப்பதுடன், அம்புலன்ஸ் படகினையும் சேவையிலீடுபடுத்த வழிசமைக்கவேண்டும்.

தீவுகளின் இறங்குதுறைகளில் பெரும்பாலானவை சேதமடைந்தும் பனங்குற்றி, கற்கள்கொண்டு பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்பட்டும் உள்ளன. இவற்றையும் திருத்தம் செய்துதர ஆவன செய்யவேண்டும். தீவுப்பகுதிகளுக்கான மரணவிசாரணை அதிகாரிகளை நியமிப்பதன் மூலம் திடீர்மரணங்கள் இடம்பெறும்போது மக்கள்படும் அவலங்களைத் தீர்க்கமுடியும்.

வேலணை மத்தியகல்லூரி ஒரு உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ளமையினால் பெரும்சிரமங்களை எதிர்கொள்வதுடன் இடம்பெயர்வதற்கு முன்னர் இருந்த பொலிவு மீண்டும் ஏற்படவேண்டும். இவ்வலயத்தை அகற்ற உதவவேண்டும். இதன் மூலம் கல்வி வளம் வளர்வதுடன் பல குடும்பங்களும் மீளக் குடியமரும்.

தீவுப்பகுதிகளில் பெரும் சிரமமான விடயமாக வைத்தியசாலையின் நிலைமைகள் உள்ளன. வைத்தியசாலைகள் உள்ளபோதும் சிகிச்சை பெறத்தக்க ஆளணி வசதிகளோ, பௌதிக வளங்களோ இல்லை. இந்நிலைமையும் சீர்செய்யப்படவேண்டும்.

புங்குடுதீவு பகுதியில் வசிக்கும் மக்கள் மத்தியில் கடற்படையினர் நடைமுறைப்படுத்தியுள்ள பாஸ் நடைமுறை நீக்கப்படவேண்டும். மண்டைதீவுப் பிரதேச மக்களும் விடுவிக்கப்பட்டு ஏனைய தீவுப்பகுதி மக்கள் போலச் சுதந்திரமாக செயற்பட வழிசமைக்கவேண்டும்.

இவ்விடயங்கள் தொடர்பாக பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுகையில் - சகல விடயங்களுக்கும் காலப்போக்கில் தீர்வுகிடைக்கும். விடுதலைப்புலிகள் கையிலே இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை கிடைக்கும் வேளையிலே நமது இலக்கை அடைந்துவிடுவோம். இல்லையெனில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து சென்று தனித்தாயகம் அமைப்பதைத் தவிரவேறு வழியில்லை என்றார் (113)

# கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் 'விடுதலை' நூல் வெளியீட்டு விழா!

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியல், தத்துவம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு நூலான 'விடுதலை' வெளியீட்டு விழா எதிர்வரும் 16.ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தேசியக்கொடியினை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைப்பார். வரவேற்புரையினை நிதர்சனம் பொறுப்பாளர் சேரலாதனும் வெளியீட்டுரையினை தமிழீழக் கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும், நிகழ்த்துவார்கள்.

தமிழீழ அரசியல்துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் நூலை வெளியிட்டு பெற்றுக்கொள்வார். சிறப்புப் பிரதிகளை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பெற்றுக்கொள்வார். சிறப்புப் பிரதிகளை தமிழீழ விளையாட்டுத்துறைப்பொறுப்பாளர் கி.பாப்பா வழங்க, மதிப்பீட்டுரைகளை யாழ்.பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் பேராசிரியர் சோ.கிருஸ்ணராஜா, 'தெரிதல்' ஆசிரியர் அ.யேசுராசா, விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர் க.வே.பாலகுமாரன் ஆகியோர் நிகழ்த்துவார்கள். நன்றியுரையினை கலை,பண்பாட்டுக்கழக யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் வளநாடன் வழங்குவார்.

# மழையுடன் கூடிய காற்றினால் மின்சாரம் தடைப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

கடந்தவாரம் யாழ். குடாநாட்டின் பலபகுதிகளிலும் தொடர்ந்து பல தடவைகள் மின்சாரம் துண்டிக்கப்பட்டமைக்கான காரணம் மழையும் காற்றுமே என சுன்னாகம் மின்சாரசபையினர் தெரிவித்தனர்.

கடந்தவாரம் திடீரென நாளொன்றுக்கு 5 தடவைகளுக்கு மேலாக மின்சாரம் தடைப்பட்டது. இதனால் மக்கள், பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர் இரவு நேரங்களில் வாகன விபத்துக்கள் ஏற்படுதவதற்குத் திடீரென மின்சாரம் தடைப்படுவது ஒரு காரணமாக அமைந்தது.

மழையுடன், காற்றும் வீசியதால் மரக்கிளைகள், ஓலைகள் என்பன மின்கம்பிகளின் மீது வீழ்ந்து மின்கம்பிகள் துண்டிக்கப்பட்டதனாலேயே மின்சாரம் தடைப்பட்டதாகத் தெரிவிக்கப்டுகிறது.

# நவாலி இந்துமயானம் சிரமதானம் செய்யப்படவுள்ளது

(சுதுமலை)

நவாலி ஆரயம்பிட்டி இந்து மயானம் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளது. மயானங்கள் மீள்புனரமைப்புத்திட்டத்தின் கீழ் தொடர்ச்சியாக வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மயானங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் ஓர் செயற்பாடாகவே எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் தொடர்ந்து ஆறு நாட்கள் சிரமதானப் பணிமூலமாக துப்புரவுப் பணிகள் இடம்பெறவுள்ளது.

இப் புனரமைப்பு வேலைகளை அப்பகுதி மக்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரைக் கொண்டு சிரமதானம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (91)

# திடீரென வீசிய காற்றினால் பனை, தென்னைகள் முறிந்தன

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பெய்துவரும் பெருமழையோடு கடந்தவெள்ளிக்கிழமை மாலை திடீரென வீசிய பெருங்காற்றினால் மட்டுவில் பகுதியில் உள்ள சேதமடைந்திருந்த பனை, தென்னை போன்ற மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

நுணாவில் - கனகன்புளியடி வீதியில் கனகன்புளியடிக்குச் சமீபமாக வீதியின் குறுக்கே விழுந்த பனை மரத்தால் அவ்வீதி வழியாகச் சிலமணி நேரம் போக்குவரத்துத் தடைப்பட்டது.

இதேவேளை, மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் கோவில் வீதியில் பனைமரம்மொன்று மதிலின் மீது முறிந்து வீழ்ந்ததில் மதில் சேதமடைந்தது. கடும் மழைகாரணமாக மக்கள் வீடுகளில் இருந்தமையால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. 24)

# குடிதண்ணீர் பாவனையாளர் சங்கம்

(சுதுமலை)

கட்டுடை காக்கதீவு ஆகிய இடங்களில் குடிதண்ணீர் பாவனையாளர் சங்கம் அமைக்கப்படவுள்ளது. இப்பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கும் போது மாதாந்தம் 5 ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது.

இதுவரை காலமும் வாரத்தில் 6 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டு வந்த இந்தக் குடிதண்ணீர் வழங்கும் செயற்பாடு தற்போது 7 நாட்கள் இடம்பெறுவதாகவும் இதன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை இலகுவாக நிவர்த்திசெய்வதாகவும் குடிதண்ணீர் பாவனையாளா சங்கத்தைச் சேர்ந்தோர் தெரிவித்தனர். (91)



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய சின்னப்பாப்பா பாட்டுநூல் வெளியீட்டு விழாவில் நூலின் முதற்பிரதியை கவிஞர் மயிலங்கூடல் நடராசனிடமிருந்து, கன்னாதிட்டி மக்கள் வங்கி முகாமையாளர் அ. குகதாசன் பெற்றுக்கொள்கின்றார். (101)

# வீதிவிளக்குகளுக்கு விண்ணப்பிக்கலாம்!

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் பிரதான வீதிகளில் வீதிவிளக்குகள் அமைக்கப்படவுள்ளது. பிரதேச சபைக்குட்பட்ட 28 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள பொது அமைப்புக்கள், சனசமூக நிலையங்களைச் சேர்ந்தோர் மானிப்பாய் பிரதேசசபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றது.

வீதி விளக்குகள் தேவைப்படும் வீதிகளில் வசிப்போர் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை உள்ளூராட்சி உதவியாளரைத் தொடர்புகொள்ளுமாறு பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர். (91)

# கட்டுடை வீட்டுத்திட்ட மலசல கூடங்கள் திருத்தப்படவுள்ளன

(சுதுமலை)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்புக்குள்ளான கட்டுடை 90 வீட்டுத்திட்ட மலசல கூடங்கள் புனரமைக்கப்படவுள்ளது. கட்டுடை 90 வீட்டுத்திட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் 40 மலசல கூடங்கள் மீள் புனரமைப்பு பணிகள் இடம்பெறவுள்ளது.

வலிதென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையினரால், மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கான வேலைகள் ஒரு சில தினங்களில் இடம்பெறவுள்ளதாக பிரதேசசபையினர் தெரிவித்தனர். (91)

# மேலதிக அரசாங்க அதிபராக சிவசுவாமி பதவியேற்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நேற்று சிவசுவாமி பதவிஏற்றார்.

இதுவரைகாலமும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பதவிவகித்த பத்தினியம்மா திலகநாயகம் போல் நேற்றுடன் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்தே அந்த இடத்திற்கு இவர் நியமனம் பெற்றுள்ளார்.

இவரது பதவி ஏற்பு நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணியளவில் யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. இவர் பருத்தித்துறை உதவி அரச அதிபராகக் கடந்த காலங்களில் பதவிவகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



I.A.T சித்திரப்பயிற்சி நிலையத்தால், யாழ்.வைத்தீஸ்வராக்கல்லூரியில் ஓவியப் பயிற்சிப் பட்டறை மூன்று நாட்கள் (15,16,17ஆம் திகதிகளில்) இடம்பெற்றது. பயிற்சி நிறைவில் யாழ்.வலயக் கோட்டக்கல்வி அதிகாரி, மாணவியொருவருக்கு சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம். (91)



# துப்பறியும் கணினிகள்



அரச அலுவலகங்களில் வேலையாட்கள் சரியாக வேலை செய்கிறார்களா என்று கண்டறிவதற்கான துப்பறியும் கணினி மென் பொருள் ஒன்று கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. அது அலு வலகங்களில் காணப்படு கின்ற எல்லாக் கணினிகளி லும் பொருத்தப்பட்டுள்ளன.



இது ஏறக்குறைய ஒரு குறித்த தூரத்திற்கு இயங்கக்கூடிய வலுவுள் ளது. உண்மையில் அலு வலகங்களில் வேலை செய்யாது ஏமாற்றுபவர் களுக்கு இவ்வகை கணினி மென்பொருள் பிரச்சி னையாக இருந்தாலும் கூட, இதனுடைய இன்னு மொரு சிக்கல் அலுவல கங்களில் ஏதாவது இர கசியமாகச் செய்வதைக் காட்டிக்கொடுத்தலாகும்.

இதனுடைய பிரதான கட்டுப்படுத்தும் பொறி - அலுவலகத் தலைவரின் பிரத்தியேக கணினியில் பொருத்தப்பட்டுள்ளது. அவர்மட்டுமே எல்லோருடைய செயற்பாடுகளையும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

தற்போது மேற்குலகநாடுகளில் பாவனையிலுள்ள இவ் வகை கணினி மென்பொருளுக்கெதிராக வழக்குப் போடவும் தயாராகிவிட்டார்கள் வேலையாட்கள்.

# ஒட்டிப் பிறந்த இரட்டையர்







உடற்பாகங்கள் ஒட்டிப் பிறந்த சோடிகள் (CON-JOINED) உலகில் 12 பேர்வரை வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

100,000 பிறப்புக்களில் ஒன்று ஒட்டிப்பிறந்தவர்க ளாக அமைவதாகத் தெரி வித்துள்ளனர். இவர்களைத் தனித்தனியாகப் பிரிக்க முற் படும்போது, பலவேளைகளில் மரணங்கள் சம்பவிக்கின்றன. அண்மையில் பி.பி.சி. 4 வானொலியில் அமெரிக்காவில் ஒட்டிப் பிறந்த சகோதரிகளான லொறி, ரேபா ஆகியோர் தொடர்பாக தெரிவிக்கப்பட்டிருந்தது. 42 வயதுடைய இந்த இரட்டைக்களின் தலைப் பாகம் ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. இவர்கள் ஒன்றாக இணைந்திருந்தாலும் சுதந்திரமாக வாழக் கற்றுக் கொண்டுள்ள னர் 'ரேபா'வின் முண்ணான் பாதிக்கப்பட்டதால், நடக்க முடியாதுள்ளார். இவர்களின் முகங்கள் எதிர்திசைகளில் அமைந்துள்ளதால் ஒருவரையொருவர் பார்க்க முடியாதுள் ளனர். கண்ணாடியின்மூலமே பார்க்கக் கூடியதாவுள்ளது. மூளையின் ஒரு பகுதி இணைந்திருந்தாலும் சுயமாக சிந்திக்க வும், செயல்படவும் முடிவதாகவும் தெரிவித்துள்ளனர். இவர்கள் இணைந்த தலைப்பாகத்துடன் வாழ்வதையே விரும்புகின்றனர். வெவ்வேறு பெயர்களின்மூலம் குறிப்பிடுவதையும் விரும்ப வில்லை. பெண் முட்டை ஒன்றிலிருந்தே இருவரும் உருவான தால் ஒருவர் எனவே கருதுகின்றனர். ரேபா ஒரு பாடகியாகவும், லொறி வைத்தியசாலையொன்றில் உடுப்புக்களை ஸ்திரி செய்ப வராகவும் தொழில் புரிகின்றனர். இருவரும் தமக்குள் தீர்மான மெடுத்த பின்னரே தமது தொழில்களுக்குச் செல்வதாகவும் குறிப்பிட்டனர்.

# மொபைல் போன்கள் ஒரு பார்வை





நாளுக்கு நாள் கையடக்கத் தொலைபேசிகளது பாவனை அதிகரித்துக்கொண்டுவரும் காரணத்தினால் கைய டக்கத் தொலைபேசிகளது விற்பனை சடுதியாக அதிகரித் துள்ளது. இவ்வளவு காலமும் மொபைல் போன் என்றவுடன் நினைவுக்கு வந்த நொக்கியா கையடக்கத் தொலைபேசிக ளைச் சாம்சுங் கையடக்கத் தொலைபேசிகள் விஞ்சி விட்டன.

ஆரம்பகாலத்தில் மலிவான கமரா போன்களை சாம்சுங் தொலைபேசி நிறுவனம்தான் விற்றது. ஆனால், கொரிய நாட்டு நிறுவனமாகிய சாம்சுங் நிறுவனம் தயாரித்த கைய டக்கத் தொலைபேசிகளின் செயற்பாடுகளில் காணப்பட்ட சிக்கல்கள், மக்களை நொக்கியா நிறுவனத்துடன் இணைய வைத்தது.

ஆனால் தற்போது வந்துகொண்டிருக்கின்ற சாம்சுங் கையட க்கத் தொலைபேசிகளின் மிகவும் சிறப்பான தொழிநுட் பத்தினைப் பார்த்தால், அவற்றுக்கு பிரதியீடாகவே நொக்கியா நிறுவ னமும் தன்னுடைய தொழில்நுட்பத் திறமைகளை வைத்து தொலைபேசிகளைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது எனக் கூறலாம். எனினும் 2004 ஆம் ஆண்டு சந்தை நிலவரப்படி, நொக்கியா 29.2%, மோட்ட ரோலா 16.5%, சாம்சுங் 13.1%, சீமன்ஸ் 8.4%, சொனி 5.7% ஆக பாவனையில் இருக்கின்றது.

# குளோனிங் கருத்தரிப்பு



இயற்கைக்கு மாறானமுறையில சந்ததிகள் குளோனிங் (CLONING) முறையில் உருவாக்கப்படுகின்றது. இம்முறையில் பெண்முட்டை ஒன்றுடன் கலம் ஒன்றில் காணப்படும் கருவை இணைத்து உருவாக்கப்படுகின்றது. பிரித்தானியாவில் விஞ்ஞானி கள் தரமான குதிரை இனங்களை உருவாக்குவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் மிருகங்களின் உரிமைக்காகப் போராடும் அமைப்பின் எதிர்ப் பினால் நிறுத்தப்பட்டுள்ளது.



இத்தாலியில் இம்முறையில் ஒகஸ்ட் மாதம் குதிரை ஒன்று உருவாக் கப்பட்டது. பந்தயங்களில் குளோனிங்முறையில் உருவாக்கப்பட்ட குதிரைகள் பங்குகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. உயர்தரமான குதிரைகளின் ஆண் - பெண் இனங்களிலிருந்தே குளோனிங் மேற்கொள் ளப்படுவதால், அதியுயர் வலுவைக் கொண்டுள்ள குதிரைகளை உரு வாக்கமுடியுமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குளோனிங் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது அதிகளவில் முளையங்கள் (EMBRYOS) அழிந்து போகின்றன.

இதனால் மிருகங்களின் நலன் தொடர்பான அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

# போரில் நச்சு வாயு



படைவீரர்கள் போர்க்களங்களில் நரம்புமண்டலத்தைப் பாதிக்கும் (NERVE AGENTS) இரசாயனப் பொருட்களின் தாக்கத்திற்குட்பட நேரிடுகின்றது. பாரஒக்சோநேசஷ் (PARA OXONASEA) எனப்படும் இரசாயனப் பொருளே இத்தாக்கத் தினை ஏற்படுத்துகின்றது. இவ்விரசாயனப் பொருளின் மூலம் படையினரை பாதுகாக்கலாமா என்பது தொடர்பாகப் அமெரிக்கப்படையினர் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இஸ்ரேலில் நடத்தப்பட்ட ஆய்வுகள் சாதக மான விளைவுகளைக் கொடுத்துள்ளன.

1995 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ரோக்கியோவின் சுரங்கப் பகுதியில் சரின் (SARIN) எனப்படும் நரம்புமண்டலத்தைப் பாதிக்கும் இரசாயனப் பொருளைத் தீவிரவாத மதக்குழு வொன்று பாவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

நரம்புமண்டலத்தைப் பாதிக்கும் இந்த நச்சுப்பொருளை படிபபடியாக உடலில் செலுத்துவதன்மூலம், நஞ்சிற்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்தமுடியும் எனவும்,

சர்க்கரை வியாதிக்குப் பாவிக்கும் இன்சுலின் மருந்தை ஒரேநேரத்தில் அதிகளவில் இரத்தத்தில் செலுத்தினால் நஞ் சாக மாறும் இயல்பினைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



# தாய்ப்பால் குறைக்கும் பருமன்



பருத்த உடலைக் கொண்டவர்களுக்கு (OBESITY) தாய்ப்பால் அவர்களது உடற்பருமனைக் குறைத்துக் கொள்வதற்கு உதவுவதாகச் சான்பிரான்சிஸ்கோ குழந்தை வைத்திய நிலையமொன்று தெரிவித்துள்ளது. தாய்ப் பாலில் காணப்படும் புரோற்றின் கொழுப்பைக் கட்டுப் படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர். குழந்தை வளர்ச்சி யடையும்போது கொழுப்பை இப் புரோத்தின்கள் கட்டுப் படுத்துகின்றன.

தாய்ப்பாலில் அடிபொனெக்ரீன் (ADIPONECTIN) எனப்படும் புரதப்பொருள் காணப்படுகின்றது. இவை இரத்தத்தில் காணப்படும் சீனி, கொழுப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துகின்றன. இதேவேளை தாய்ப்பாலில் லெப்ரின் (LEPTIN) எனப்படும் மற்றுமொரு புரதமும் காணப் படுகின்றது. இப்பொருளும் கொழுப்பைக் கட்டுப்படுத்து கின்றது. தாய்ப்பால் நோய் எதிர்ப்புச் சக்தியையும் அதிகரிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## திரை விமர்சனம்

# எதிரி



இயக்குநர் ரவிக்குமார் இயக்கத்தில் மாதவனுடைய முதல் படம் - முரட்டு வில்லன்கள், அடிதடி, காதல், கிளாமர் மற்றும் நகைச்சுவை என்று எல்லாக் கறிகளுடனும் படைக்கப்பட்ட விருந்து எதிரி.

திருவல்லிக்கேணியில் மகள் கனிகாவுடன் வாழ்ந்துவரும் பிராமணர் டெலலிகணேஷை அவர் வீட்டில் குடியிருக்கும் முரட்டு மாணவர் கும்பல் படாதபாடுபடுத்துகின்றது. அக்கா மகளைக் காதலனுடன் சேர்த்து வைக்க பணத் தேவையில் இருந்த மாதவன், பிரபல ரவுடியாக நடித்து அந்த மாணவர் கும்பலை வீட்டை விட்டுக் காலி செய்ய வைக்க, டெல்லிகணேஷிடமிருந்து பணத்தை வாங்குகின்றார். பின்பு அந்த மாணவர்களுடன் நண்பராகிவிடுகிறார். திருமண மண்டபத்தில் மணக்கோலத்தில் இருக்கும் நண்பனின் காதலியைத் தூக்கி வரச்சென்ற விவேக்கும் மாதவனும் மாறி சதாவினைத் தூக்கி வந்து விடுகின்றனர். சதாவின் அப்பா பெரிய தாதா. மாப்பிள்ளை மிகவும் கொடுமைக்கார உதவி கமிஷனர் ரகுமான். கல்யாணம் நின்ற கோபத்தில் இவர்கள் மாதவனைத்தேட, மாதவனுக்கும், சதாவிற்கும் காதல் மலர்கின்றது. இவர்கள் எப்படி இணைகிறார்கள் என்பது மீதி. ரகுமான் முதற்முதலாக வில்லன் என்றாலும் அவர் பங்கினை வடிவாகச் செய்து முடித்திருக்கின்றார். மாதவன் காதல், நகைச்சுவை, ஆக்ஷன் என்று படம் முழுக்க தனது வாய்ப்பினை நன்றாகப் பயன்படுத்தியிருக்கிறார். சதா அலட்டாமல் அளவாக நடித்திருக்கிறார். டெல்லி கணேஷின் பாத்திரம் விசித்திரமாக இருக்கின்றது. அவர் மகளை எப்போதும் சந்தேகத்துடனேயே பார்க்கின்றார். விவேக் தனது நகைச்சுவைக்குள் ரஜினி ஸ்டைலைக் கொண்டுவருவது - விவேக் இது தேவையா எனக் கேட்கத்தோன்றுகிறது.

சண்டைக்காட்சிகள் பெப்சி விஜயன். யுவன்சங்கர்ராஜாவின் இசையில் ஒரு குறைவு இருக்கின்றது. எடிட்டிங் டி.கே.தணிகாசலம் படத்தின் நீளத்தைக் குறைத்திருக்கலாம். "எதிரி" ரவிக்குமாருக்கு எதிரியல்ல.

- ஜெயா -

# சந்திர கிரகணம்

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தோன்றிய சந்திரகிரகணத்தை (Eclipse) பிரித்தானிய மக்களால் அவதானிக்க முடியாதிருந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டதே. இதன காரணமென தெரிவிக்கப்பட்டது.



இதனால், தென கிழக்கு வானத்தில் உயரமான இடத்தில் இருந்தவர்களினால் மாத்திரமே அவதானிக்கமுடிந்தது. இவர்களுக்கு, சந்திரகிரகணத்தை அவதானிக்கும் சந்தர்ப்பம் அடுத்த 5 மாதங்களின் பின் ஒக்டோபர் மாதத்தில் கிடைக்கவுள்ளது. சந்திரகிர கணங்கள் - சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்று கோள்களும் ஒரு நேர் கோட்டில் வரும்பொழுது நிகழ்கின்றன. பூமியின் கூம்பு வடிவில் அமைந்த நிழல் பிர தேசத்திற்குள் சந்திரன் நுழையும் போது இக் கிரணம் ஏற்படுகின்றது. இந் நிலையில் பூமியிலிருந்து தெறிந்த கதிர் (REFRACTED RAYS) மாத்திரமே சந்திரனின் மேற்பரப்பை அடையமுடியும். பூமியின் தூசுக்களுக்கூடாக இக்கதிர்கள் பிரயாணம் மேற்கொள்ளும்போது நிறங்கள் உறிஞ்சப்படுகின்றன. சிவப்பு நிறம் மாத்திரமே சந்திரனின் மேற்பரப்பைச் சென்றடைகின்றது. இதனால் கிரகணத்தின்போது சந்திரன் சிவப்பு நிறமமாகத் தோற்றமளிக்கின்றது. சென்ற வருடம் நவம்பர் மாதத்தில் ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் கிரகணத்தைக் காணக்கூடியதாக இருந்தது.

# அணு ஆராய்ச்சி

பிரித்தானியாவில் அணுசக்தி ஆராய்ச்சி நிலையமொன்றின் செயற்பாடுகளை நிறுத்திவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்டதற்கு 30 ஆண்டு காலத்திற்கு முன்னரே இது நிறுத்தப்படவுள்ளது.



அணுசக்தி ஆராய்ச்சி நிலையம் அமைந்திருந்த பிரதேசம் இயற்கை வனப்புமிக்க பிரதேசமாக மாற்றப்படவுள்ளது.

1950 ஆம் ஆண்டுகளில் அணுசக்திமூலம் மின் உற்பத்தி செய்வதற்காகவும், ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காகவும் இந்நிலையம் அமைக்கப்பட்டிருந்தது. இந்நிலையம் அமைந்திருந்த பகுதியின் 250 ஏக்கர் நிலப்பரப்பு வனவிலங்கு அறக்கொடை ஒன்றிற்கு விற்கப்படவுள்ளது. இந்த அணுசக்தி நிலையம் அருகிலுள்ள பிரதேசத்தில் வாழ்ந்த உயிரினங்களின் இயற்கைச் சூழலுக்கு அச்சுறுத்தலாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

# பெற்றோர் உஷார்!

மேற்குலக நாடுகளில் பிள்ளைகள் எல்லோருடைய கைகளிலும், கையடக்கத் தொலைபேசிகள். அத்துடன், அவை சாதாரண தொலைபேசிகள் அல்ல. அளவிற்கதிகமான அதியுன்னதமான தொழில்நுட்பங்களைத் தன்னகததே கொண்ட கையடக்கத் தொலைபேசிகள்.



இதன் காரணமாகப் பெற்றோர்கள் மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இணையத்தில காணப் பயன்படுகின்ற 3G தொலைபேசிகள் பலதரப்பட்ட வசதிகளைக்கொண்டவை. அவற்றின்மூலம் இன்ரநெற் மற்றும் ஈமெயில் பார்ப்பதற்கான வசதிகளும் காணப்படுகின்றன.

பாடசாலை மாணவர்கள் வெப்தளங்களின் மூலம் பலதரப்பட்ட செயற்பாடுகளைச் செய்துவருகின்றனர். அவர்களில் சிலர் வெப்தளங்களை நல்ல தேவைகளுக்கும், சிலர் தீயதேவைகளுக்கும் பயன்படுத்தி வருகின்றனர்.

இதன் காரணமாக மாணவ சமுதாயம் சீரழிந்துபோவதற்கு வாய்ப்பாகின்றது. மாணவர்களைத் திருத்தவும் முடியாமல், அவர்களிடமிருந்து கையடக்கத்தொலைபேசிகளைப் பறிக்கவும்முடியாமல் பெற்றோர் திண்டாடுகின்றனர்.

# சூப்பர் எக்ஸ்-பி கணினி

எவ்வளவுதான் கணினி உலகில் பல்வேறான முன்னேற்றங்கள் வருகின்றதோ, அவற்றிற்கெல்லாம் கட்டுப்படாத ஒரு பெரிய பிரச்சினை கணினியில் இருக்கின்றது. அது தான் வெப்பம் பற்றிய பிரச்சினை.




கணினியை எவ்வளவுதான் குளிர் அறைக்குள் வைத்திருந்தாலும், அதனுடைய சூடேறும் தன்மையால் ஏற்படும் விளைவுகளைத் தீர்க்கமுடியாதுள்ளது. இதன் காரணமாகக் கணினியின் வேகம் குறைந்துகொண்டே செல்கின்றது. இதற்குரிய நிவாரணமாக இன்ரெல் கம்பனி ஒரு புதிய வகையான கணினி சிப்ஸினைக் கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது.

இது வெளிவருவதிலுள்ள தாமதம் - இது வெப்பத்தினால் முற்றுமுழுதாகப் பாதிப்படையாமல் இருக்க வேண்டும் என்பதனாலாகும். ஆனால், இன்ரெல் நிறுவனம் பென்டியம் IV இல் இவ்வகைச் சிப்ஸ்களைப் புகுத்தவிருந்தது. ஆனால், அது முடியாத காரணத்தினால், 2005 ஆம் ஆண்டு வரவிருக்கும் புதிய எக்ஸ் - பி கணினியில் இது புகுத்தப்படும் என்று கூறப்படுகின்றது.

# காபனீரொட்சைட் கடலுக்கடியில்



பூமியின் மேற்பரப்பில் காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்து வருகின்றது. இதனால், வளிமண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்துதல் அவசியமாகின்றது. இந்தக் காலத்தில் காலநிலை மாறுபாடுகள் தொடர்பாக ஆய்வில் ஈடுபட்டுள்ள மையத்தின் பேராசிரியர் ஜோன் செப்பேட் இந்தக் கருத்தினைத் தெரிவித்துள்ளார். இதனால், நிலத்தின்கீழ் அமைந்துள்ள எண்ணெய்க்கு (Fossil Fuel) மாற்றுவழி காண்பது அவசியமெனவும், அணு உலையிலிருந்து பெறப்படும் சக்தி மாற்றுவழியாக அமையலாமெனவும், சூழலின் வெப்பநிலையை உயர்த்துவதற்குத் துணையாகவும் அமைகின்றது. தொழிற்சாலைகள் மயப்படுத்தப்பட்ட நாடுகளில் காபனீரொட்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்துதல் அவசியமாகின்றது. இதனால், எவ்வாறு காபனீரொட்சைட்டின் அள்வைக் கட்டுப்படுத்தலாம் என்பதற்குச் சில வழிமுறைகளைத் தெரிவித்துள்ளார்.

காபனீரொட்சைட்டுடன் சேர்பென்ரைன் (Serpentine) எனப்படும் இரசாயனப் பொருளை இணைக்கும்போது மக்னேசைட் (Magnesite) என்னும் திடப்பொருள் உருவாகின்றது. இவற்றைக் கடலில் 9850 அடி ஆழத்தில் புதைத்துவிடலாம் எனத் தெரிவித்தார். அடுத்து பூமியின் மேற்பரப்பின் வெப்பத்தைத் தெறிப்படையச் செய்யும்போது, காபனீரொட்சைட் பூமியின் மேற்பரப்பில் தேங்குவது குறைக்கப்படலாம் எனவும், இதற்குப் பெரிய ஆடிகளையும் பிரதிபலிக்கக்கூடிய பலூன்களையும் பாவிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# விமானம் - கூடிய வசதிகளுடன்



**1960** ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போயிங் 747 ஜம்போஜெற் ரக விமானம் தான் முதல் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பெரிய விமானமாகும். இதற்குப் பிறகு விமானக் கண்டுபிடிப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக 400 பயணிகள்வரை ஒரே நேரத்தில் பயணம் செய்யக்கூடிய விமானங்கள் பாவனையிலுள்ளன.

ஆனால், **A** 380 ரக விமானங்கள் 500 தொடக்கம் 700 வரையான பயணிகளை ஒரே நேரத்தில் கொண்டு செல்லக்கூடியது. இந்த விமானங்களில் காணப்படக்கூடிய குறைபாடு மக்கள் எதிர்பார்க்கின்ற வசதியின்மையாகும். மக்கள் அதிலும் மேலைத்தேய நாட்டு மக்கள் விமானங்களில் மதுபானச்சாலை, சூதாட்ட விடுதிகள் மற்றும் கடைகள் ஆகியவற்றை எதிர்பார்க்கிறார்கள். இவற்றைக் கருத்திற்கொண்ட விமானக் கம்பெனிகள், இப்படியான வசதிகளையெல்லாம் செய்துகொடுப்பதற்காக 7E7 ஆகிய அற்புதமான புதியவகை விமானம் ஒன்றை விமானசேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சியில் இறங்கியிருக்கின்றன. இதில் முன்னணியில் திகழ்கின்ற விமான நிறுவனம், ஜப்பான் நிப்போன் எயார் வெயிஸ் ஆகும்.

2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்த விமானம் தனது சிறகுகளை விரித்துப் பறக்கும் என நம்பலாம்.

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## மாதிரி வினாத்தாள்

## தமிழ் – I

மூன்று மணித்தியாலம்

முதலாம் பகுதியலுள்ள இரு வினாக்களுக்கும் இரண்டாம் பகுதியிலுள்ள எவையேனும் நான்கு வினாக்களுக்கும் எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

01. பின்வரும் செய்யுட் பகுதிகளில் எவையேனும் மூன்றினைத் தெரிவுசெய்து
   அ) அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
   ஆ) தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

I) மையற விளங்கிய மணிநிற விசும்பி
கைதொழு மரபின் எழுமீன் போலப்
பெருங்கடற் பரப்பின் னிரும்புறந் தோயச்
சீறுவெண் காக்கை பலவுடன் ஆகும்
துறைபுலம் புடைத்தே தோழி பண்டும்
உள்ளூர்க் குரீஇக் கருவுடைத் தன்ன
பெரும்போது அவிழ்ந்த கருந்தாட் புன்னைக்
கானலங் கொண்கன் தந்த
காதல் நம்மொடு நீங்கா மாறே.

II) ஊனைக் குறித்த வுயிரெலாம் நாணொன்னு
நன்மைக் குறித்தது சால்பு
பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு
குடி செயவலென்னு மொருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்
குற்றமிலனாய்க் குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சூழ முலகு

III) எழுந்தனன் இளையவன் ஏறினான், நிலம்
கொழுந்து உயர்ந்தனையது ஓர்நெடிய குன்றின்மேல
செழுந்திரைப் பரவையைச் சிறுமை செய்த அக்
கழுந்துடை விரிசலைக் கடலை நோக்கினான்.

பரதன் இப்படைகொடு பார் கொண்டவன் மறம்
கருதி உள் கிடந்ததோர் கறுவு காதலால்
விரதம் உற்று இருந்தவன் மேல் வந்தான் இது
சரதம் மற்று இலது எனத் தழங்கு சீற்றத்தான்

IV) இருகதி குறுவான் அதையும் உன்னிடமே
இறக்குவன் உனைப் பரிபாலித்து
அருளவும் வணங்கித் துதிக்கவும் மிகுந்தோர்
தமை யமைத்து அருள்வன் அன்பு ஓங்கி
பெருகுபார்பு அதனைத்தேடி வந்து அடையும்
பறவையைப் போல பிள்ளையைத் தேடி
வரும் அனையினைப் போல் எனது கல்குகள் உன்
மாட்டினில் வருகவும் புரிவேன்

02. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**நாவலர் பெருமான்**

திருவளர் தெய்வத் தமிழ்வள நாடு
செய்த தவப்பயனே செந்தமிழ் மக்கள்
புத்தியினிக்கும் தெள்ளமுதே தேனே!
வரமருள் சைவத் திருநெறி யுய்ய
வந்தருள் தேசிகனே வாடிய பழைய
தமிழ் மொழி தழைய மழைபொழி கலைமுகிலே
பரமத திமிரக் குரைகடல் சுவற
பருகிடு தவமுனியே பரனருள் நீறும்
சிவமொழி வீறும் பரவிட வருள் குருவே
அருவளர் மதுரத் தமிழுரை நடைசெய்
ஐயா அடிபோற்றி ஆறுமுகப் பெரு
நாவலனாமத் தரசேயடி போற்றி

அன்னநடை பிடியினடை யழகுநடை
யல்லவென வகற்றி யந்நாட்
பன்னுமுது புலவரிடஞ் செய்யுணடை
பயின்ற தமிழ்ப் பாவையாட்கு
வன்னநடை வழங்குநடை வசனநடை
யெனப் பயிற்றி வைத்த வாசான்
மன்னுமருள் நாவலன்தன் னழியாநல்
லொழுக்க நடை வாழி! வாழி!

பார்மதித்த செந்தமிழ் நூலேடுகளை
யாராய்ந்து பதிப்பித்தோர்கள்
ஆர்பதித்தாலுமங்கே பிழைநுழைக
லுண்டாகு மவைக ளின்றச்
சீர்பதித்த நற்பதிப்பு நாவலர் தம்
பதிப்பென்று செப்பு மேன்மைப்
பேர் பதித்த பெருங்கல்விச் செல்வனிரு
சேவடிகள் பெரிதும் வாழி!

தன்னவரும் பிறருமென்று சாராமே
நடுவுநிலை சார்ந்து நின்றே
அன்னவர்கள் வழுவியவை யஞ்சாது
வெளிப்படுத்தி யறிவை யூட்டும்
முன்னவனே தமிழ் மக்கள் முதுநிதியே
கற்பகமே முடியாக் கல்வி
மன்னவனே யென வாழ்த்த வந்துதித்த
நாவலன்றாள் வாழி! வாழி!

I) நாவலர் பெருமானிடத்தில் புலவர் கொண்ட ஈடுபாடு பற்றி ஆராய்க.
II) நாவலரது தமிழ்ப் பணியின் சிறப்பு எடுத்துரைக்கப்படு மாற்றை விளக்குக.
III) நாவலரது உரைநடைச் சிறப்பு எவ்வாறு கவிஞரால் வெளிப்படுத்தப்படுகிறது?

அல்லது

மாரிகாலம் முழுவதும் ஓய்ந்து தூங்கிக் கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கிவிட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்துகொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூரிய ஒளி வெள்ளம் பாயவே அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலிந்து இறுகியிருந்த நரம்புகள் விண்போல் தெறித்தன. எழுந்துநின்று கண்களைச் சுழற்றி தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால்வற்றி, பசுமையும், மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக்கொண்டிருந்தன. 'இன்னும் 15 நாட்களில் ......' என்று அவனை அறியாமல் வாய் முணுமுணுத்தது.
முருகேசன் மனதிலே ஒரு பூரிப்பு, ஒரு ஆறுதல், ஒரு மன அமைதி. அவன் ஒருவருடமாகப் பாடுபட்டது வீண்போகவில்லை அல்லவா. ஆனால், இவற்றுக்கிடையில் காரணம் இல்லாமல் 'சிலவேளை ஏதேனும்...... யார் கண்டார்கள்' என்ற இன்பமும் துன்பமும் கலந்து ஒரு மன ஏக்கம்!
முருகேசனுக்கு வயலைவிட்டுப் போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது என்றாலும், பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகத் தன் கைகளால் அணைத்து தன் குழந்தைகளைப் போலத் தழுவிக் கொணடிருந்தான்.

I) இந்தப் பகுதியில் விபரிக்கப்படும் முருகேசனின் மனநிலை யாது?
II) வயலுக்கும் முருகேசனுக்கும் இருந்த தொடர்பினை ஆசிரியர் எவ்வாறு காட்டுகிறார்.
III) இந்தப் பகுதியில் வெளிப்படும் ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பினை விளக்குக.

### பகுதி II

03. "குடிசெயல் வகை" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
   அ) ஆள்வினையுடைமைக்கான காரணம்
   ஆ) முயற்சி செய்வார்க்குத் தெய்வம்தானே துணைசெய்யும்
   இ) குடியைக் காப்பவரின் பாரமும் சுமப்பவரின் சிறப்பும்
   ஈ) குடிசெய்வாரின் இயல்பு
   உ) தலைவன் இல்லாத குடிக்கு நிகழும் துன்பம்

04. "கலிங்கத்துப் பரணி" யை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.
   அ) பாலைவனத்தின் வெம்மை
   ஆ) பாலைவனத்திலுள்ள மரங்களின் நிலை
   இ) தற்குறிப்பேற்ற அணியை இந்தக் பகுதியில் சயங்கொண்டார் கையாண்டுள்ள ஆற்றல்

05. கம்பராமாயணம் "திருவடிச்சூட்டு" படலத்தில் -
   அ) தந்தையின் மரணம் கேட்டு இராமன் அடைந்த வேதனை
   ஆ) வசிட்ட மா முனிவர் இராமனுக்குக் கூறிய தேறுதல் மொழிகள் என்பவற்றை விளக்குக.

06. மஹாகவி பாரதியாரின் 'வெண்ணிலா' என்ற கவிதையைக் கொண்டு விளக்குக.
   அ) பாரதியார் இயற்கை அழகில் கொண்ட ஈடுபாடு
   ஆ) அதனை வெளிப்படுத்த அவர் கையாண்ட உத்திகள்.

07. "தவப்பயன்" என்ற சிறுகதையில்
   அ) நிர்மலாநந்தரின் கடும்துறவு நிலை எவ்வாறு காட்டப்படுகிறது.
   ஆ) நிர்மலாநந்தரின் மறுபிறப்பை ஆசிரியர் எவ்வாறு நியாயப்படுத்துகின்றார்.

08. "பாட்டும் ஓசையும" எனும் பகுதியில் பேராசிரியர் வி.செல்வநாயகம்
   அ) கவிதைக்குக் கூறும் விளக்கம் யாது.
   ஆ) நல்ல பாட்டுக்கும் தீய பாட்டுக்கும் இடையேயான வேறுபாட்டை ஆசிரியர் எவ்வாறு விளக்குகிறார்.
   இ) அவர் பாட்டை படித்துக் கிரகிக்கும் முறை பற்றிக் கூறுவது யாது?

09. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றை விளக்குக.
   அ) "மாமலர் முண்டகம்...." எனும் கலித்தொகைப் பாடலில் தோழி தலைவனுக்கு எடுத்துக் கூறிய அறிவுரை யாது?
   ஆ) "திருக்குற்றாலக்குறவஞ்சியில்" வசந்த வல்லி பந்தடிக்கும் போது அவளது அழகு எவ்வாறு காட்டப்படுகிறது?
   இ) "தேயிலைத் தோட்டத்திலே" எனும் கவிதையில் மக்களின் வாழ்க்கை எவ்வாறு சித்தரிக்கப்படுகிறது.
   ஈ) "கனகாம்பரம்" என்ற சிறுகதையில் பெண்ணின் மெல் உணர்வுகள் காட்டப்படுமாற்றை விளக்குக.
   உ) திருப்பள்ளியெழுச்சிப் பாடல்களில் காணப்படும் இறைவனின் பெருமையை விளக்குக.

## தமிழ் – II

மூன்று மணித்தியாலம்

முதலாம் பகுதியிலுள்ள மூன்று வினாக்களுக்கும் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில் இருந்து ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு வினாவேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி I

1. கீழ்வரும் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து 350 - 400 வரையான சொற்களைக் கொண்ட ஒரு கட்டுரை எழுதுக.
   அ) பேராசிரியர் செல்வநாயகத்தின் தமிழ்ப் பணி
   ஆ) பழமொழிகளில் பண்பாடு
   இ) தமிழில் கணினியியல்
   ஈ) நாடகங்களில் சமூக வாழ்க்கை
   உ) போரும் சமாதானமும்
   ஊ) ஒற்றுமையின் உயர்வு

2. பின்வரும் (அ) உரைப்பகுதியையும் (ஆ) செய்யுளையும் படித்து அவை ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தன்னை இகழ்வாரைப் பொறுத்தல் தலை" என்றார் வள்ளுவர். அவரின் கருத்துக்களை சிரமேற்கொண்டு வாழ்க்கை நடத்துதல் வேண்டும். எனினும் 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்தல்' என்றும் வள்ளுவர் கூறியிருக்கின்றாரே. ஆகவே, 'ஒறுத்தல் எனும் தண்டனையை வள்ளுவர் வழங்குவதற்கு அனுமதித்திருக்கின்றார் என்று கருதுதல் கூடாது. பொறுமை மூலம் பெருமை பெறலாம் என்பதே வள்ளுவரின் சிந்தனையாகும்.
   I) இந்தப் பகுதியில் ஆசிரியர் கூறவந்த முக்கிய கருத்து யாது?
   II) அதனை ஆசிரியர் எவ்வாறு வலியுறுத்துகின்றார்.
   III) ஆசிரியர் கூறும் கருத்துக்கனை 15 சொற்களுக்குச் குறையாமல் சுருக்கி எழுதுக.

ஆ. கல்லானேயானாலும் கைப்பொருளுண்டாயின்
எல்லோரும் சென்றங்கே எதிர்கொள்வர்-
இல்லானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்
செல்லாதவன் வாயிற்சொல்.

   I) செய்யுளின் பொருளை 15 சொற்களுக்குள் தருக.
   II) இந்தப் பாடலில் வந்துள்ள அணி யாது?
   III) இந்தப் பாடலில் முக்கிய கருத்து யாது?

03. (அ), (ஆ), (இ) பகுதிகளில் உள்ள வினாக்களில் ஒவ்வொன்றிலும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாகப் பத்து வினாக்களுக்கு விடை தருக.

அ) I) வேற்றுநிலை மெய் மயக்கமாக மட்டும் அமையும் எழுத்துக்கள் யாவை.
   II) மொழிமுதற் போலிக்கு உதாரணம் தந்து விளக்குக.
   III) 'பல்வேறுலகம் படைத்தழித்த வெங்கண் பரந்தாமனுக்கு துதி செய்வோம்' - சந்தி பிரிக்குக.
   IV) நாகு, செலவு, பந்து, மகிழ்வு ஆகிய சொற்களில் குற்றியலுகரம், முற்றியலுரகங்களை வேறுபடுத்தியெழுதுக.
   V) மொழியின் முதலில் வருகின்ற உயிரெழுத்துக்களை குறிப்பிட்டு உதாரணம் தருக.

ஆ) VI) "கத்தியால் வெட்டினான்" இதில் வந்துள்ள வேற்றுமை உருபு யாது? அது என்ன பொருளில் வந்துள்ளது.
   VII) தன்மை, முன்னிலைப் பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது கொள்ளும் மாற்றங்கள் எவை?
   VIII) ஐயர், அய்யர், அஇயர் ஆகிய மூன்று சொற்களின் வேறுபாட்டை எழுதுக.
   IX) படித்தவன், எழுதியவன், வந்தான், இருந்தான் இவற்றில் வினையாலணையும் பெயர்களை வேறுபடுத்தி அவை ஏன் அப்பெயரைப் பெற்றன எனக் காரணம்தருக.
   X) செய்வினை, செயற்பாட்டுவினை ஆகியவற்றிற்கு இரு உதாரணங்கள் தருக.

இ) XI) உம் என்னும் இடைச்சொல் குறிக்கும் நான்கு பொருட்களைத் தருக.
   XII) 'கண்ணனே எடுத்தான்' என்ற வாக்கியத்தில் ஏகாரம் குறிக்கும் இரண்டு பொருட்களை எழுதுக.
   XIII) இராப்பகல், பவளவாய் இந்த சொற்கள் எவ்வகைத் தொகைகள் எனக் குறிப்பிடுக.
   XIV) நாளை கப்பல் புறப்படுகின்றது - இந்த வாக்கியத்தில் உள்ள வழுவைச் சுட்டிக் காடடி, அவற்றைத் திருத்தி எழுதுக.
   XV) எறும்பு முட்டைகொண்டு திட்டை ஏறின் மழைபெய்தது இந்த வாக்கியத்தின் வழுவைக் குறிப்பிட்டு, திருத்தி எழுதுக.

### பகுதி II

01. அ) சங்ககால இலக்கியங்களைக் குறிப்பிடுக.
   ஆ) அவற்றை அகம், புறம் என வகுத்துக் காட்டுக.
   இ) சங்ககால அகத்திணை மரபைக் கையாண்டே நாயன்மார்கள் பக்திப் பாடல்களைப் பாடினர். இந்தக் கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.
02. அ) சோழர் காலத்தில் எழுந்த இலக்கியங்கள் எவை? அவற்றைப் பொருள் அடிப்படையில் பாகுபடுத்துக.
   ஆ) சோழர் காலம் ஒரு காப்பிய உற்பத்திக் காலம். என்பதன் பொருத்தப்பாட்டை விளக்குக.
03. அ) கவிதைகளின் வடிவம் தமிழ் இலக்கிய வரலாற்றில் மாற்றமுற்றிருக்கின்ற வகையை பாரதி பாடல்கள் மூலம் விளக்குக.
   ஆ) பாரதியார் காலத்துக் கவிஞர்கள் சிலரின் பெயரைக் குறிப்பிடுக்.

### பகுதி III

01. அ) 17 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய இலக்கியங்களைக் குறிப்பிடுக.
   ஆ) அவற்றை இலக்கியப் பொருள் அடிப்படையில் பகுத்துக் காட்டுக.
02. அ) 18 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் எழுந்த இலக்கியங்கள் பற்றி விளக்கி எழுதுக.
   ஆ) இலங்கையின் இலக்கிய வளர்ச்சிக்கு அச்சு இயந்திரங்கள் ஆற்றிய பங்கை மதிப்பிடுக.
03. அ) இலங்கையில் சிறுகதை வரலாற்றில் சிறப்புப் பெறும் சிறுகதை ஆசிரியர்களைக் குறிப்பிட்டு அவர்களில் ஒருவர் பற்றி விளக்கி எழுதுக.
   ஆ) ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் மறுமலர்ச்சி சஞ்சிகை பெறும் இடம் யாது? விளக்குக.
04. அ) ஈழத்து இலக்கியவளர்ச்சியில் பின்வருவோரில் இருவரின் பணியை விளக்குக.
   1) பேராசிரியர் வித்தியானந்தன்
   2) பேராசிரியர் கணபதிப்பிள்ளை
   3) ஈழத்துப் பூதந்தேவனார்
   4) மயிலங்கூடல் நடராசன்
   5) அரசகேசரி
   6) மாதகல் மயில்வாகனப் புலவர்.

பூ.நகுலன் B.A.(Hons)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நல்லினத்தின் ஊங்கும் துணைஇல்லை தீஇனத்தின்*
*அல்லல் படுப்பதூஉம் இல.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதானம் சாத்தியமா?

மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சுமுகமான நிலையோ - சாத்தியக்கூறோ தென்படுகிறதா என்பதே அமைதியை நேசிக்கும் அனைத்துத் தரப்பாலும் கேட்கப்படும் கேள்வியாகவும், பேசப்படும் விடயமாகவும் இன்று உள்ளது என்பது உண்மையே.

ஆனால், இதற்கு சாதகமான வகையில் பதில் எதுவும் தென்படுவதாக இல்லை.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர் மீண்டும் சமாதான முன்னெடுப்புகளை உடனடியாகவே தொடங்க, அனுசரணையாளராகச்செயற்பட்ட நோர்வே அரசுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்தபோது, மகிழ்ச்சி ஏற்பட்டதைவிட ஆச்சரியமும், சந்தேகமும் மட்டுமல்ல ஒருவகையிலான பீதியும்கூட ஏற்பட்டது என்பதும் நிஜமேயாகும்.

தன் நெஞ்சறிய உண்மையாகவே, ஆத்மார்த்தமாகவே சந்திரிகா சமாதானத்திற்கான அழைப்பை விடுத்தாரா என்பது கேள்விக்குறியே!

ஒருபுறம் சந்திரிகா, ஒரு காலத்தில் - அதாவது, கடந்த அரசின் சமாதான முயற்சிகள் தீவிரமாக முனனெடுக்கப்பட்ட வேளையில், ஏற்பட்ட நம்பிக்கைதரும் மாற்றங்களும், அதற்கான விடுதலைப் புலிகளின் விட்டுக்கொடுப்புடன்கூடிய பரந்த அளவிலான ஆதரவும், சர்வதேச சமூகத்தின் உற்சாகத்துடன்கூடிய அனுசரணையும் ஏற்படுத்திய அதிர்ச்சியால் கொதிப்பும், வெறுப்பும்கொண்டவராகி, நோர்வே அரசின் சமாதான ஏற்பாட்டாளர்களில் ஒருவரான எரிக் சொல்ஹெய்ம் அவர்களைச் சமாதான செயற்பாடுகளில் இருந்து நீக்குமாறு நோர்வே அரசுக்கு கோரிக்கை விடுத்ததும் ஒரு சில வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்வுகளேயாகும்.

வெளிப்படையாகக் கூறுவதானால் - சந்திரிகாவோ அவரது தோழமைக்குரிய கூட்டுச் கட்சிகளைச் சேர்ந்தவர்களோ கடந்த அரசின் சமாதான முயற்சிகளை, அதற்கான நோர்வே அரசின் மத்தியஸ்தத்தை, சர்வதேச சமூகத்தின் அங்கீகாரத்தை முற்றும் முழுதாக வெறுத்தார்கள், நிராகரித்தார்கள். அத்துடன், அதனைக் குழப்பி, அதன்மூலம் தமது சுயநல அரசியல் அனுகூலங்களைப் பெறமுயன்றார்கள் என்றால் அது மிகையான கருத்தேயல்ல....

அந்த முயற்சியின் உச்சக்கட்ட நடவடிக்கைதான் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று அமைச்சுக்களைப் பறித்ததில் தொடங்கி நாடாளுமன்றத்தைக் கலைத்தது வரையில் நடைபெற்ற அரசியல் சூழ்ச்சியுடன்கூடிய நாடகமாகும்.

ஆனால், குழப்பிய சமாதானத்தை மீண்டும் அதே தடமொற்றித் தொடரவேண்டிய அழுத்தம் தனக்கு ஏற்படுமென்று சந்திரிகா கனவுகூடக் கண்டிருக்கமாட்டார் என்பதில் சந்தேகமில்லை.

நோர்வேயிடம் மீண்டும் சரணடைய வேண்டிவரும் என்றோ, விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கவேண்டிய அவசியமும், அவர்களை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக தனது ஆலோசகர் கதிர்காமரின் வாயாலேயே சொல்லவைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றோ சந்திரிகா எதிர்பார்த்தே இருக்கமாட்டார். ஆனால், வரலாறு அவரை அதனையெல்லாம் அவர் விரும்பியோ விரும்பாமலோ செய்யவைத்தேவிட்டது.

இப்போது சமாதானக் குதிரையில் ஏறிய சந்திரிகா - தான சறுக்கிவிழாமல் இருக்க மேற்கொள்ளும் பிரயத்தனந்தான் பரிதாபகரமான விடயமாகிவிட்டது. புதிய அரசுடன் சமாதானப் பேச்சுக்களுக்கு உடன்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் சந்திரிகாவுடனான முன்னைய சமாதானப் பேச்சுவார்த்தை காலப்பட்டறிவு அனுபவங்கள் - அவர்களை இம்முறை எச்சரிக்கையாகவே இருக்கவைக்கும் என்பது அனைவருக்கும் புரியும். சர்வதேச சமுகமும் இதை உணர்ந்தே உள்ளது.

ஏற்கனவே விட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தைகளை தொடரவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நியாயமான நிலைப்பாடு - புதிய சமாதானப் பேச்சுக்களுக்கு நெருக்கடியைத்தரும் விடயமாகியுள்ள நிலையில், அந்தப் புலிகளின் கோரிக்கைக்கு தனது தோழமைக் கட்சியான ஜே.வி.பியை சம்மதிக்கவேண்டிய சூழல் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.

தமக்கு விருப்பமில்லாவிட்டாலும் பேச்சுக்களில் ஒரு பிரதான தரப்பாக புலிகளை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டுள்ளது என்று கூறும் ஜே.வி.பியினர் - விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்று பேச்சுநடத்த சம்மதம் தெரிவித்த கதிர்காமரின் கூற்றுடன் ஒத்துவருபவர்களாக இல்லை.

ஹெல உறுமயவோ சமாதானப் பேச்சுக்களையோ முற்றாக நிராகரிக்கும் கோட்பாட்டிலிருந்து இறங்குவதாக இல்லை.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுக்கள் குறித்த பேச்சுக்களை விடுதலைப் புலிகளோடு அல்லது முதலில் அரசின் தோழமைக் கட்சிகளோடு ஆரம்பிக்கவேண்டிய அவசியம் சந்திரிகாவுக்கு ஏற்பட்டுள்ளது.

சமாதானம் குறித்த ஒருமித்த கருத்து அரசாங்கத்தின் உறுப்பினர்களிடையே ஏற்படாத வரையில் பேச்சுவார்த்தைகளை புலிகளுடன் தொடர்வதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

அப்படித் தொடர்ந்தால் அது வேறு உள்நோக்கங்களுடன் கூடிய காலம்கடத்தும் முயற்சியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை...

இந்தச் சூழலில் சமாதானம் தொடர்தல் சாத்தியமா என்ற கேள்வி எழுவது நியாயமே.

இதற்கான பதிலை அரசும், சர்வதேச சமூகமும் தான் உறுதிப்படுத்தவேண்டும்.

# நாடும் நடப்பும்




### பேச்சுக்களை ஆரம்பிக்க

# எழுத்துமூல உத்தரவாதத்தை நோர்வே கோரியது உண்மையே

### கொழும்பு வார இதழ் கூறுகின்றது

புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான எழுத்துமூலமான உத்தரவாதம் ஒன்றைத் தருமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நோர்வே அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக வெளியான செய்திகள் - உண்மையானவையே என கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக இலங்கை அரசின் நிலைப்பாட்டை எழுத்துமூலமாகத் தருமாறு நோர்வே அரசாங்கத்தினால் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாக வெளியான செய்திகளில், எந்த வித உண்மையும் இல்லையென ஜனாதிபதி செயலகம் மறுத்திருந்தது.

இது குறித்து ஊடகங்களில் வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவை என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த மறுப்பறிக்கையில் முன்னர் கூறப்பட்டிருந்தது.

ஆனால், இந்தச் செய்தி உண்மையே என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருப்பதுடன், இத்தகைய உத்தரவாதம் எதையும் நோர்வே கோரவில்லையானால் ஏன் அந்த நாடு இன்னும் இதற்கு மறுப்பு வெளியிடவில்லை எனவும் கேள்வி எழுப்பியிருக்கின்றது.

## ஒப்பரேசன்- லிபரேசன் நூல்வடிவம் பெறுகிறது

1987 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றும் நோக்குடன் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற இராணுவ நடவடிக்கை தொடர்பான நூல் ஒன்று வெளிவரவுள்ளது.

'ஒப்பரேசன் லிபரேசனும் வடக்குப் போர்முனையும்' என்ற பெயரில் வெளிவந்துள்ள இந்த நூலை - லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முன்னாள் பத்திரிகையாளரான கப்டன் திலக் சேனநாயக்க என்பவர் எழுதியுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒப்பரேசன் லிபரேசன் இராணுவ நடவடிக்கையில் நேரடியாகப் பங்குபற்றி வந்த இந்த நூலாசிரியர் - தற்போது இராணுவத்தின் மூன்றாவது கெமுனு வோச் படைப்பிரிவில் பணியாற்றி வருகின்றார்.

இந்நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி பொறளையில் நடைபெறவுள்ளது. புலிகளிடமிருந்து 1987 ஆம் ஆண்டு மே 26 ஆம் திகதி வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்ற எடுக்கப்பட்ட பாரிய படை நடவடிக்கையில் இராணுவத்தரப்புக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியதுடன், பெரும்பாலான பொது மக்களும் படையினரும் கொல்லப்பட்டிருந்தனர். இந்த நடவடிக்கையின் பின்னர் நெல்லியடியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவமுகாமை புலிகள் கரும்புலித் தாக்குதல் மூலம் அழித் ததையடுத்து இந்தியத் தலையீடு ஏற்பட்டதும் குறிப்பிடத்தககது.

## சனசமூக நிலையங்களுக்கான நன்கொடை நிதி வழங்கப்படவுள்ளது

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டிற்கான நன்கொடை நிதி 1600 ரூபா உடனடியாக வழங்கப்படவுள்ளது.

பரிசோதனைப் படிவங்களைச் சமர்ப்பித்த சனசமூக நிலையங்களுக்கே இந்த நிதி வழங்கப்படும். இதுவரை பல சனசமூக நிலையங்கள் சமர்ப்பித்திருந்தது. இன்னும் சுமார் 30 சனசமூக நிலையங்கள் தமது பரிசோதனைப் படிவங்களை சமர்ப்பிக்கவில்லை.

எனவே, இந்த மாதம் 14 ஆம் திகதிக்கு முன் திட்டமிடல் உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸிடம் ஒப்படைக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திகதிக்குப் பின் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (101)

## வாக்காளர் பெயர்ப்பட்டியல் கணினி மயப்படுத்தப்படவுள்ளது

யாழ். மாவட்ட வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல் விரைவில் கணினி மயப்படுத்தப்படும் என யாழ். உதவித்தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். செயலகத்தில் இயங்கிவரும் உதவித்தேர்தல் திணைக்களத்தில் வாக்காளர் டாப்புப் பெறவருவோர் பல சிரமங்களை அனுபவித்து வருவது குறித்துக் கேட்டபோது, அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவ்வட்டாரங்களில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

வாக்காளர் இடாப்பு இலக்கத்தைப் பெறுவதிலும், வாக்களிக்கும் காலங்களில் வாக்காளர்கள் தமது பதிவுகளைப் பார்வையிடுவதிலும் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைவிட பல்வேறு வேலைப்பழுக்களையும் குறைக்க வேண்டிய நிலையில் இவ்வாண்டு முடிவிற்குள் சகல வாக்காளர் விபரங்களும் கணினி மயப்படுத்தப்படவுள்ளன.

இதன்மூலம் பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்க முடியும் என நம்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ப)

# அரசியலமைப்பு மாற்றத்தில் புதிய அரசாங்கம் அக்கறை!

இலங்கையின்அரசியல் யாப்பை மாற்றியமைப்பது குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தொடர்ந்தும் பெரும் கரிசனையுடன் செயற்பட்டுவருவதாக தெரியவருகின்றது.

இதன்படி, அரசியலமைப்பை மாற்றியமைப்பது குறித்து ஜனாதிபதி சந்திரிகாவால் அமைக்கப்பட்ட சட்டக்குழுவினர் வாராவாரம் சந்திப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு நெருக்கமான சட்டநிபுணர் ஒருவர் இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில்-

அரசியலமைப்புச் சீர்திருத்தத்திற்கான சட்டக்குழுவினர் வாரா வாரம் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கலந்துரையாடல்களின்போது அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் அரசாங்கத்திற்கு இல்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ள இந்தச் சட்டநிபுணர் - கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெளிவான மக்களாணையைப் பெற்றுள்ளநிலையில், பெரும்பான்மைப் பலம் குறித்து கவலைப்பட வேண்டிய தேவை அராங்கத்திற்கு இல்லை எனவும் குறிப்பிட்டார்.

ஆர்.கே.மேனன்

# புரிந்துணர்வின்மைக் குறைபாடுகளே மானுட பிரச்சினைகளின் மூல காரணம்



## உளவியல்

மனித உறவுகள் என்பது மிகவும் புனிதமான ஒன்று. பணம், புகழ், அந்தஸ்து இவையெல்லாம் ஒரு எல்லைக்கப்பால் நிதானமான, நிம்மதியான உளநிலைக்கு வித்திடாது. பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் இதற்கிடையில் நாம் எதைக் கண்டோம். நான்கு மனிதர்களுடன் சந்தோசமாக வாழ்நததுதான் இறுதியில் கண்டமிச்சமாகும். ஆகவே, இந்தப் புனிதமான உறவுகளை உடையவிடக்கூடாது. இன்றைய நிலையிலுள்ள எமது சமூகக் கட்டமைப்பு, உளவியல் ஆய்வுகளை உற்றுநோககின்றபோது மிகவும் கவலைக்குரிய இடத்தில் இருக்கின்றமையைக் காணலாம்.

எத்தனை பதிவுத் திருமணங்கள் இன்று பரிதாபகரமாக பிரிந்திருக்கின்றது. வந்த உறவுக்காகப் பெற்ற உறவுகளைப் பிரிந்திருக்கும் பிள்ளைகள் எத்தனை! அர்த்தமற்ற பிரச்சினைகளால் அடிதடிவரை சென்று பிரிந்திருக்கும் அன்புச் சகோதரர்கள் எத்தனை! இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். எமது சமூகத்தில் துஷ்பிரயோகப்படுத்தப்படுகின்ற உறவுகளின் உண்மைத் தன்மையைக் கூட்டுக்குடும்பமாக இருந்து குதர்க்கம் பேசி, கும்மாளமடித்த எமது சமூகம்- இன்று குடும்ப உறவுகளின் உண்மைத்தன்மை தெரியாமல் குமுறுகின்ற வாய்பேச்சுக்கு, இடமளித்து, குறுகிய வாழ்க்கைக் காலததையே கோபதாபத்தில் கழிக்கின்றன. இதற்கெல்லாம் அடிப்படையென்ன? அதுதான் இந்தப் புரிந்துணர்வு. குடும்பத்தில் நிகழும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் உண்மைத் தன்மையைத்தேட முற்படின், அதற்கு புரிந்துணர்வின்மையே அடிப்படைக் காரணங்களாகின்றன.

புரிந்துணர்வு என்பது மிகப் பெரிய உளவியல் வரைறையோடு கூடிய ஒரு பகுதியாகும். இதனை நாம் இன்றைய சமூகப் பிரச்சினைகளோடு சேர்த்து சாதாரணமாக ஆராய்வோம்.

புரிந்துணர்வு என்பது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஏகப்பட்ட புறத்தாக்கங்களின் முன்னிலையில், ஒருவர் இன்னொருவரது உணர்வுகளைப் புரிந்துகொண்டு செயற்படுதல் ஆகும். இப்புரிந்துணர்வில் பங்கெடுக கின்ற பல்வேறு அம்சங்களை ஒவ்வொரு தலைப்புக்களுக்கு ஊடாக ஆராய்வோம்.

### ஆழமாக செவிமடுத்தல்

எமது ஆற்றல்களையோ அல்லது எமது பிரச்சினைகளையோ எமது உணர்வுகளையோ பிறருக்கு வெளிப்படுத்தும் முன், அவர்களுடைய பிரச்சினைகளையும் அவர்களது வெளிக்கொணர்வுகளையும் செவிமடுத்தல் என்பது இன்றியமையாத அம்சமாக விளங்குகின்றது. சாதாரண வாழ்க்கையில் மனித உரையாடல்கள் மூலம் இதனை எமது அனுபவத்தில் கண்டிருப்போம். ஒரு சிலரது பிரச்சினைகளை ஆழமாகவும் பொறுமையாகவும் செவிமடுப்பதற்கூடாகவே அவர்கள் அப் பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு மன



நிறைவு பெறுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. ஒருவரது உணர்வுகளைப் புரிந்துகொள்ளவும், அவர்களது பிரச்சினைகளை ஆழமாக இனங்காணவும், அவர்களுக்கூடான எமது செயற்பாடுகளைச் சீர்செய்யவும் ஆழமாகச் செவிமடுத்தல் என்பது இன்றியமையாததொன்றாக விளங்குகின்றது. எம்மில் பலரிடம் காணப்படுகின்ற ஒரு குறைபாடு - எடுத்த எடுப்பில் பிரச்சினைகளை விளங்காது வார்த்தைகளை வெளியிடுதலாகும். ஒருவரோடு அதிகமாகப் பழகுகின்றபோது, அவருடன் நீண்டகால நட்புறவை வளர்க்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றபோது, நாம் அவர்களுடைய கதைகளுக்கும் செவிசாய்ப்பதனூடாகவே அவர்களுடைய விருப்பு வெறுப்புக்களையும் உணர்வுகளையும் புரிந்துகொள்ள முடியும். அந்த வகையில் பிறருடைய வார்த்தைகளை அலட்சியம் செய்யாது செவிமடுத்து அடிமனதினை ஓரளவு புரிந்துகொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும்.

### கருத்துரைக்கு மதிப்பளித்தல்

எந்தவொரு மனிதனது வார்த்தைகள் பிழையாக இருந்தாலும், சரியாக இருந்தாலும் அந்த வார்த்தைகளுக்கு மதிப்பளித்து அதற்கமைய கருத்துக்களை வழங்க வேண்டும். எந்த வார்ததைக்ளையும் அலட்சியப்படுத்தக்கூடாது. ஏனெனில், அந்த வார்த்தைகள் பிழையாக இருந்தாலும், சரியாக இருந்தாலும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட மனவுணர்வுகளுக்கூடாக ஒரு கவலையின் நிமித்தம் உருவாக்கப்படுகின்ற கருத்துக்கள். இதை அலட்சியம் செய்கின்றபோது அவரது உளநிலையில் பாரிய பின்விளைவினை ஏற்படுத்திவிடும். இந்தக் கட்டத்தில் எமது நிலைப்பாட்டை ஒருபுறம் வைத்து அவரது கருத்தினை குறிப்பிட்ட சந்தர்ப்பம், சூழ்நிலைகளோடுகூடி ஆராய்ந்து கொள்ளப் பழகிக்கொள்ளவேண்டும். இதுவும் புரிந்துணர்வின் இன்றியமையாதவொரு அம்சமாகும்.

### உணர்வினைப் புரிந்து கொள்ளல்

எந்தவொரு பிரச்சினைக்கும் அடிப்படையாக இருப்பது சந்தர்ப்ப சூழ்நிலை. சில சந்தர்ப்பங்களில் சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட முடியாமல் இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில் சில கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதாக இருக்கலாம். ஆகவே, சந்தர்ப்பத்தை அடிப்படையாகக்கொண்ட உணர்வுகள் என்பது இங்கு கருத்தில் எடுக்கப்பட வேண்டியதொன்று. உண்மையான சில உணர்வுகளை உதடுகளால் சொல்லமுடியாது. உண்மையானவற்றை விவாதம்மூலம் பொய்யாக்கலாம். பொய்யானவற்றை விவாதம்மூலம் உண்மையாக்கலாம். ஆகவே, வார்த்தைகளைக் கொண்டு எதையும் தீர்மானிக்கமுடியாது. மற்றவர்களது உணர்வுகளையும் நாம் புரிந்தகொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும். அதாவது, ஒரு கருத்து முன்வைக்கப்படுகின்றபோது எமது நிலைப்பாட்டை ஒருபுறம் வைத்து, கருத்தை முன்வைத்தவன் எந்த சந்தர்ப்பத்தில் முன்வைத்தான்? அப்போது இருந்த மனநிலை என்ன? பின்னணித் தாக்கங்களால் அவனுக்கு ஏற்பட்ட மனச்சோர்வுகள் என்ன? என்ன எதிர்பார்ப்போடு அந்த வார்த்தை முன்வைக்கப்பட்டது என்று சிந்தித்தோமானால், குறிப்பிட்ட நபரினது உணர்வினைப் புரிந்துகொள்ள முடியும்.

### உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்

ஓர் உணர்வு ஒரு மனிதனிடத்தில் உருவாகின்றதென்றால் அது எப்படிப்பட்ட உணர்வுகளாயிருந்தாலும் அதற்கு மதிப்பளித்தல் வேண்டும். தீய உணர்வுகளாக இருந்தால், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முடியாவிட்டாலும் பின்பு அதனைத் திருத்திக்கொள்ள முற்படலாம். ஆனால், நல்ல உணர்வுகளுக்கு விட்டுக் கொடுத்து மதிப்பளிக்கப் பழகிக்கொள்ளவேண்டும். பிழையான செயற்பாடாக இருந்தாலும் உணர்வுகளிற்கு மதிப்பளிப்பதற்காக விட்டுக்கொடுப்பதில் எந்த விதமான தவறும் இல்லை.

### விட்டுக்கொடுப்பு

இது வாழ்க்கையில் மிக முக்கிய விடயம். எத்தனையோ உறவுகளை சம்பாதிப்பதற்குக் காரணமாக இருக்கின்ற விடயம். எமது சமூகத்தில் காணப்படுகின்ற அடிப்படை உளநிலையொன்று - விட்டுக்கொடுப்பதால் எமது தராதரம், எமது கௌரவம் இழந்து விடுமோ என்ற அச்சசுபாவம். இது தவறு. எனது தராதரம், எனது நிலைப்பாடு எனக்குப் போதும் என்று நினைப்பவன் என்றுமே தன்னைப்பற்றி பெரிதாக அலட்டிக்கொள்ளமாட்டான். அதே நேரம் மற்றவர்களிற்கு விட்டுக் கொடுப்பதற்குப் பின்னிற்கமாட்டான். விட்டுக் கொடுப்பதால் ஒருசில கணப்பொழுதுகளில் எமது நிலைப்பாடு குறைந்தாலும்கூட, அடுத்து வரும் கணப்பொழுதுகளில் எமது வெற்றியை இனங்காணமுடியும். அனைவரும் வாழ்வதற்காகவே இந்த அகிலம் படைக்கப்பட்டது. அடுத்தவனை தாழ்த்தி எமது கௌரவத்தை தேட முற்படுவது என்றுமே நிலைக்காத ஒரு முயற்சியாகும். ஆகவே, விட்டுக்கொடுப்பதால் நாம் குறைந்து போவதில்லை. எம்மால் இயன்றவரை விட்டுக்கொடுக்க வேண்டும்.

இத்தனை அம்சங்களோடு கூடி கட்டி எழுப்பப்படும் மானிட உளவியிலின் ஒரு பகுதிதான் இப்புரிந்துணர்வு ஆகும். ஒருவரது வார்த்தைகளை செவிமடுக்கவேண்டும். அந்த கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். இவற்றுக்கூடாக அவரது உணர்வினைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்துகொண்ட அந்த உணர்வுகளுக்கு மதிபளிக்க வேண்டும். இதற்கூடாக எம்மால் இயன்ற வரை விட்டுக்கொடுத்து புரிந்துணர்வை வளர்த்தெடுக்கவேண்டும். விட்டுக்கொடுக்கின்ற பொழுது எம்மால் எமது உளநிறைவு அடையக்கூடிய வகையில்தான் விட்டுக் கொடுக்கவேண்டும். எமக்குள் உளநிறைவு அடையாமல் விட்டுக் கொடுத்துவிட்டு, எமது மனம் மீண்டும் சஞ்சலப்படுமேயானால் பின்பு பாரிய முரண்பாடுகளை உருவாக்கி விடும். "நாமும் மனிதர்கள் தானே" ஆகையால் இயன்றளவு மாத்திரமே விட்டுக்கொடுக்கவேண்டும். நாம் எந்தவொரு பிரச்சினையை அணுகின்ற பொழுதும் எமது மட்டத்தில் இருந்து மாத்திரமே சிந்திக்கின்றோம். இதனால்தான் பிரச்சினைகள் உருவாகின்றன. எமது நிலைப்பாட்டை ஒருபுறம் வைத்து, அவரது நிலையில் இருந்தும் சிந்திக்க வேண்டும். குறித்த அந்த நிலையில் இருந்தால்தான், நான் எப்படி நடந்திருப்பேன்? என்ன செய்திருப்பேன்? என்ற சிந்தனையே பல பிரச்சினைக்குத் தீர்வைக் கொடுத்துவிடும். இதுவே புரிந்துணர்விற்கான அடிப்படை அம்சமாகும். குறுகியகால வாழ்க்கையில் நான் எப்படி வாழலாம்? நான் எப்படி வெற்றி பெறலாம்? என்று சிந்திக்கவேண்டும். நான் தோற்கக்கூடாது. எனது கௌரவம் குறையக்கூடாது என்று மாத்திரமே சிந்திக்கின்றோமே தவிர, மனித உறவுகளின் முக்கியத்துவத்தையோ மனித உறவுகளோடு பெருமபாலும் சந்தேசமாக வாழவேண்டும் என்ற எண்ணக்கருவையோ நாம் கொண்டிருப்பது குறைவு. எமது கௌரவங்கள் எமது நிலைப்பாடுகளை இன்னொரு மனித உறவுகளுக்காக விட்டுக்கொடுப்பதால் மானம் அதனால் குறைகின்றது என்பது மதிப்பிட்முடியாது. ஆகவே உண்மையான உறவுகளை உலகியல் வாழ்க்கையில் நாம் ஆதரிக்க வேண்டும். மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதரங்கள் இவையெல்லாம் உளவியல் வாழ்க்கையில் கிடைக்காத ஒரு செல்வங்களாகும். சிறிய சிறிய புரிந்துணர்வின்மையால், தயவுசெய்து இந்த உறவுகளை துஷ்பிரயோகப்படுத்தாதீர்கள். பாலியல் உணர்வுகளுககு பலிகடாக்கள் ஆக்குவதற்காக மாத்திரம் மனைவி என்ற உறவு இல்லை. அது ஒரு இன்பமான எமது கஷ்டதுன்பங்களில் பங்கெடுக்கின்ற ஒரு இனிமையான வாழ்க்கைத்துணை. இப்படியான உறவுகளை தயவு செய்து துஷ்பிரயோகப்படுத்தாதீர்கள், புரிந்துணர்வுடன் வழி நடத்துங்கள்.

"உண்மையான உறவுகள் என்றுமே உருக்குலைந்து போகக் கூடாது"

> **உண்மையானவற்றை விவாதம் மூலம் பொய்யாக்கலாம். பொய்யானவற்றை விவாதம் மூலம் உண்மையாக்கலாம். ஆகவே வார்த்தைகளைக் கொண்டு எதையும் தீர்மானிக்கமுடியாது. மற்றவர்களது உணர்வுகளையும் நாம்புரிந்துகொள்ளப் பழகிக் கொள்ளவேண்டும்.**

---

அமரர் ராஜ.ஸ்ரீகாந்தன் நினைவாக...

வதிரி - சி.ரவீந்தரன்

# ஒரு படைப்பாளி ஒரு பத்திரிகையாளன் பற்றிய நினைவுகள்!



மனிதர்கள் பிறப்பதுவும், இறப்பதுவும் நியதியாகும். ஆனால், வாழ்க்கையில் மறக்க முடியாத மனிதர்களாகவும் சிலர் அமைந்து விடுவார்கள். அவர்களுள் அமரர் ராஜ.ஸ்ரீகாந்தனும் ஒருவர். இவர் எழுத்தாளன், மொழி பெயர்ப்பாளன், பத்திரிகையாளன் ஆகிய வடிவங்களுள் அமைந்தவர். அடுத்து அவர் மக்களுடன் பழகிய பண்பும் ஒரு உயர்ந்த இடத்தை வகிக்கிறது. இதனால் பல்லின மக்களாலும் விரும்பும் மனிதனாக விளக்குகின்றார்.

வடமராட்சியின் வதிரி என்ற கிராமத்தில் இராஜரட்ணம் - சீவரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனாகப் பிறந்தவர். சிறுவயதிலிருந்தே அமைதியான சுபாவம் உடையவர். இவர் தனது தந்தையாரின் மூத்த சகோதரியினால் வளர்க்கப்பட்டார். மாமியாருக்கு பிள்ளைகள் இல்லாமயால் இவர் மாமா-மாமியினால் அன்பாக வளர்க்கப்பட்டார். இவருக்கு ஆரம்பக் கல்வி சைவப்பள்ளிக்கூடமான கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியாகும். இங்கு கவிஞர் செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம் ஆகியோரிடம் ஆரம்பக் கல்வியைக் கற்றார். பின்பு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடைநிலைக் கல்வியை ஆரம்பித்தார். அங்கு கற்கும் காலத்தில் வித்துவான் ஆறுமுகத்திடமும் தமிழறிவைப் பெற்றுக்கொண்டார்.

அதேவேளை, அந்தக் கல்லூரி ஆசிரியரும் முற்போக்கு சிந்தனைவாதியுமான தோழர் வி.பி. (வி.பொன்னம்பலம்)யின் பேச்சு, செயல்களில் கவரப்பட்டார். அதனோடு இவரும் ஒரு முற்போக்குச் சிந்தனை வாதியாக மாறினார். ஸ்கந்தாவிருலிந்து ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி ஆகியவற்றிலும் தனது உயர்கல்வியைத் தொடர்ந்தார்.

இவர் தனது கிராமத்தில் எவ்விதமாக தன்னை அர்ப்பணித்தார் என நோக்கும்போது- மாணவர்களுக்கு இலவச கல்வியை ஒழுங்கு செய்து கற்பித்தார். கணிதம், பௌதீகம், ஆங்கிலப் பாடங்களே அவரது பாடங்களாகும். வதிரி தமிழ் மன்றத்தில் இணைச செயலாளராக சி.க.ராஜேந்திரனுடன் இணைந்து செயல்பட்டார். இவர்களது முயற்சியால் இளைஞர்கள் மத்தியில் ஒரு இலக்கிய விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டது. கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கவியரங்குகள் ஆகியவற்றை அமைத்து வாய்ப்புகளை ஏற்படுத்தினார். மு.பாக்கியநாதனுடன் இணைந்து 'மன்றம்' என்ற சஞ்சிகையை நடாத்தி பலருக்கு எழுத வாய்ப்பளித்தார். 'போயாவிருந்து' என்ற நிகழ்வை ஏற்படுத்தி இளைஞர்களின் பேச்சாற்றலை வளப்படுத்த முன்னின்றார். பல இலக்கிய கர்த்தாக்களை அழைத்துப் பேசவும் வைத்தார். கல்லூரியில் கற்கும் காலத்திலேயே உதைபந்தாட்ட அணியில் அங்கம் வகித்த இவர், வதிரி டயமண்ட் விளையாட்டுக் கழகத்திலும் பின்னணி வீரனாக விளையாடிப் பிரமிப்பூட்டினார். டயமண்ட் கழகத்தினதும், ஸ்கந்தா, ஹாட்லி கல்லூரி உதைபந்தாட்ட அணிகளிலும் இவரது பெயர் புகழ்ந்து பேசப்பட்டது.

ராஜ.ஸ்ரீகாந்தன் ஒரு சிறுகதையாளனாக வருமுன், கவிதைகளே எழுத ஆரம்பித்தார். புதுக் கவிதைப் பரப்பில் இவரது சில கவிதைகள் புகழப்பட்டன. "தனி ஒரு மனிதனுக்கு உணவில்லையெனில் இவ் ஜெகத்தினை அழித்திடுவோம்" என்றவனே இவ்வுலகத்திற்கே உணவில்லையடா! என்ற கவிதையும், 'Q' என்ற கவிதையும் பிரபல்யமாகப் பேசப்பட்டவை. இவர் மரபுக் கவிதையும் எழுதியுள்ளார். இவர் கவிதை எழுதுவதை இவரை வளர்த்த மாமனார். க.நா.சண்முகநாதனிடம் கற்றுக் கொண்டார். "நாடகக் கவிஞர்" பட்டத்தை கிருஷ்ண ஆழ்வாரிடம் பெற்றுக்கொண்ட இவர், இசை நாடக இயக்குநர். இவரே ஸ்ரீகாந்தனின் ஆரம்ப கலை-இலக்கிய வழிகாட்டியென்றும் கூறவேண்டும். பத்திரிகைகளுக்கு கவிதைகளை எழுதிய ஸ்ரீகாந்தன், சிறுகதைகளையும் எழுதினார். அழகுவின் 'மதமற்றிசன்' என்ற ஆங்கில சிறுகதையை தமிழகத்தின் தீபம் சஞ்சிகையில் 'கணிதவியலாளர்' என்ற மொழி மாற்றத்துடன் எழுதினார். 1969 இல் ராஜ ஸ்ரீகாந்தன் ஈழத்துச் சஞ்சிகைகள், பத்திரிகைகளிலும் எழுத ஆரம்பித்தார்.

எனது சின்னப் பருவத்திலிருந்தே ராஜ. ஸ்ரீகாந்தனுடன் நெருங்கிய தொடர்பிருந்தது. அவரது "பாக்கிய வாசா" வீட்டிற்குச் செல்லும் போது சிறுகதை, கவிதை நூல்களையும் வாசிக்கத்தரும் அவர், பத்திரிகையில் வெளிவந்த ஆக்கங்களையும் படிக்கத் தருவார். இவரது ஆக்கங்களை படித்த எனக்கும் பத்திரிகைகளுக்கு எழுதவேண்டுமென்ற ஆசை கொண்டு எழுத ஆரம்பித்தேன். இதைத் தொடர்ந்து 'பூவரசி' (கா.புஸ்பராணி)யும் எழுத ஆரம்பித்தார்.

ராஜ.ஸ்ரீகாந்தன் எழுத்தை ஒரு சக்தியாக அர்ப்பணித்தார். எங்களால் அப்படி இயங்க முடியவில்லை. இவரது இரண்டு நூல்கள் காலச்சாளரம், கணிதவியலாளன் என்பன சாகித்ய விருது பெற்றவையும், 'தினகரன்' பத்திரிகையில் ஆசிரியராக இருந்தமையும் அவரது திறமைக்குக் கிடைத்த கௌரவமாகும். என்னுடன பேசும்போதெல்லாம் எனது கவிதைத் தொகுதியை வெளியிடுவதுபற்றிக் கதைப்பார். இறுதியாகப் புதுவருடத்தன்று தொலைபேசியில் எனக்கு வாழ்த்துத் தெரிவித்த அவர் "இவ்வருடம் உனது கவிதைத் தொகுதி வெளியிடவேண்டும். இவ்வருடத்தின் கவிதைகளை எண்ணிடம் கொண்டு வந்துதா செயல்படுவோம்." என்றார். ஏழு நாட்களுக்குள் எல்லாமே முடிந்து விட்டது. எனது கவிதைகள் என்னைப் பார்த்து கேட்டன. நூலுருப்பெறுவோமாவென்று? நான் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து நின்றேன்.

# ஈராக்கின் தென்பகுதியில் உள்ள எண்ணெய்க் குழாய்களுக்கு தீவைப்பு

ஈராக்கின் தென்பகுதியிலுள்ள எண்ணெய்க் குழாய்களுக்கு கிளர்ச்சியாளர்கள் வைத்த தீயினால் எண்ணெய்க் குழாய்கள் பற்றி எரிவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு பற்றி எரியும் தீயினை அணைக்கும் முயற்சியில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஈடுபட்டு வருகின்றன.

ஈராக்கின் தென்பகுதியான 'பா




குடாப் பகுதியிலுள்ள எண்ணெயை தாங்கி வரும் குழாய்களே நேற்று முன்தினம் காலை கிளர்ச்சியாளர்களால் தீவைக்கப்பட்டவையென கூட்டுப்படைகளின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அல் பசறா எண்ணெய் நிரப்பும் நிலையத்துக்கு எண்ணெய்யைக் கொண்டுவரும் குழாய்கள் தீப்பிடித்து எரிந்ததாகவும், அந்தக் குழாய்கள் மூலம் செல்லும் எண்ணெய்யின் வேகத்தை குறைத்துள்ளதாகவும், ஆனால் முழுமையாக நிறுத்தவில்லை எனவும் அவர் மேலும தெரிவித்தார்.

ஈராக்கின் தென்பகுதியிலுள்ள அல் பசறா மற்றும், கோர் அல் அமையா ஆகிய இரு எரிபொருள் நிலையங்களும் இணைந்து 1.6 மில்லியன் பரல் எண்ணையை ஏற்றுமதி செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வாரத்திற்கு முன்னர் ஈராக்கின் தென்பகுதியிலுள்ள எண்ணெய் நிலையங்கள் மீது படகு முலம் மோதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்த முற்பட்டவேளை, அதனை கூட்டுப் படையினர் முறியடித்திருந்தனர். அதன்பின், நேற்றுமுன்தினம் எண்ணய்க் குழாய்கள் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு வெளிநாட்டவர்கள் ஆப்கானில் படுகொலை



ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் இரு வெளிநாட்டவர்களின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக அந்த நாட்டு அரச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்களின் மரணம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. சிலர் இவர்கள் கற்களால் எறிந்து கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறியுள்ளனர்.

பி.பி.சி செய்தியாளர் அன்ரூ நோத் தெரிவிக்கையில் - ஒருவர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார் எனவும், மற்றவர் குண்டாந்தடியால் அடித்துக் கொல்லப்பட்டார் எனவும் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட ஒருவர் சுவிஸ் நாட்டவர் என்றும் மற்றையவர் அடையாளம் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருவரும் ஆப்கான் உடையில் இருந்தபோதிலும் வெளிநாட்டவர்கள் போல காணப்பட்டதாக ஆப்கான் அரசுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

# ஈராக்கில் நடந்த தாக்குதலில் வெளிநாட்டு பொறியியலாளர் பலி!

ஈராக்கின் வடபகுதியிலுள்ள கிர்குக் நகரத்தில் வெளிநாட்டவர் பிரயாணம் செய்த வாகனத்தின் மீது துப்பாக்கிதாரிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு வெளிநாட்டவர் உட்பட இருவர் கொல்லப்பட்டு, மற்றொருவர் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கிய பொலிஸாரின் தகவலின்படி தென்னாபிரிக்க நாட்டைச் சேர்ந்த ஒருவரும், ஈராக்கிய நாட்டைச் சேர்ந்த மற்றொருவரும் கொல்லப்பட்டதாகவும், நியூஸிலாந்தைச் சேர்ந்தவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த இருவரும் பொறியியலாளர்கள் எனவும், இறந்த ஈராக்கியர், வாகனச் சாரதி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் பாக்தாத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 3 பேர் கொல்லப்பட்டதுடன், 8 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த ஹோட்டல் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் தங்குமிடம் எனவும், இந்தக் குண்டுவெடிப்பில் காயமடைந்தவர்கள் பிரிட்டன் நாட்டவரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கின் பயா நகரத்தில் இடம்பெற்ற மற்றொரு குண்டுவெடிப்பில் 9 பொதுமக்களும், 6 ஈராக்கிய படையினரும் காயமடைந்தனர். வியாபார நிலையத்தின் மத்தியில் வைக்கப்பட்ட இரு குண்டுகளை அகற்ற முற்படுகையிலேயே இந்தக் குண்டுவெடிப்பு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிலிப்பைன்சில் ஜனாதிபதி தேர்தல்

(மணிலா)

குழப்பங்களுக்கும், தேர்தல் மோசடிகளுக்கும் மத்தியில் பிலிப்பைன்சில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றுள்ளது. இதுவரை தேர்தல் வன்முறைகளினால் 90 பேர் வரை கொல்லப்பட்டனர். நேற்று தேர்தல் நடைபெறுவதற்கு முன்னரே 16 பேர் வரை கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்புக்களில் ஜனாதிபதி குளோரியா அரோயோ பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் திகழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. திரைபட நடிகரும், அரசியல் அனுபவமில்லாத பெர்ணான்டோ போ ஜனாதிபதி அரோயோவிற்கெதிராக போட்டியிட்டுள்ளார்.

இறுதி முடிவை அறிந்துகொள்வதற்கு பிலிப்பைன்ஸ் மக்கள் ஒரு மாதம் வரை காத்திருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஜனாதிபதி தேர்தலில் பெரும்பான்மை பலத்துடன் திகழும் அரோயோ தேர்ந்தெடுக்கப்படும் நிலையில் 6 ஆண்டுகள் பதவிவகிப்பார்.

2001 ஆம் ஆண்டு மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களால் ஜோசப் எஸ்ராடா பதவியிலிருந்து நீக்கப்பட்டபோது அரோயோ பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கண்ணீர் அஞ்சலி

ஜனனம் 12 – 05 – 1940



மரணம் 27 – 04 – 2004

### சிற்றம்பலம் முருகேசு

எங்கள் வெற்றிகளிலும்,
வளர்ச்சிகளிலும் பெருமை
கொண்டவரே,
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
சிரம்தாழ்த்தி அஞ்சலி
செலுத்துகின்றோம்.

(சி-2514)

புதிய வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
(யா/விக்கினேஸ்வரா கல்லூரி அருகாமை)

என்றும் அன்பு மறவாத
மருமக்கள்.

# ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தல் பிளேயர் மன்னிப்புக் கோரினார்!



(லண்டன்)

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் பிரான்ஸ் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஈராக்கிய அகதிகள் மீது பிரிட்டன் படையினர் மேற்கொண்ட துன்புறுத்தல்களுக்கு மன்னிப்புக் கேட்டுள்ளார்.

அத்துடன், இராணுவ சட்டங்களின் அடிப்படையில், சித்திரவதைகளில் தொடர்புடைய படையினர் தண்டிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கேள்விகளுக்கு, பாதுகாப்பு அமைச்சர் ஜொவ் காடன் நேற்று பதிலளிக்கவிருந்தார்.

ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தல்கள் தொடர்பாக சென்ற பெப்ரவரி மாதத்தில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிந்தது.

அத்துடன், சர்வதேச மன்னிப்புச் சபையும் கடந்த மே மாதம் ஈராக்கியக் கைதிகள் பிரித்தானியப் படையினரால் சித்திரவதைக்கு உட்படுத்துவது தொடர்பாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதேவேளை - பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவிக்கும் போது - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்ட தகவல்களை வெளியிடமுடியாத நிலையில் தாம் இருப்பதாகவும், இது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த நிலையில், பிரிட்டனின் வெளிநாட்டு நிழல் செயலாளர் மைக்கல் அன்கிராம் சட்டசபையில் உண்மையைத் தெரிவித்து தன்னை தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டுமென அரசைக் கோரியுள்ளார்.

அத்துடன், இதன்மூலம் பணியாற்றும் பிரித்தானிய படையினரின் உளப்பாங்கில் மக்கள் முழுமையான நம்பிக்கை கொள்ள் வேண்டுமெனவும் தெரிவித்தார். பிரித்தானிய அமைச்சர்களின் கருத்துக்கள் தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச்சபை




தெரிவிக்கையில் - கடந்த வருடம் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் ஈராக்கிய கைதிகளின் துன்புறுத்தல்கள் தொடர்பாக தெரிவித்திருந்ததாகவும், இந்த விடயத்தில் - பிரிட்டன் தனது அதிக கவனத்தைச் செலுத்தவில்லையெனவும் குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்க ஜனாதிபதி புஷ் பென்ரகனுக்கு விஜயம்!





ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தல் விவகாரத்தினால் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ் பீல்ட் பதவி விலகும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளார்.

இந்த நிலையில், பாதுகாப்பு செயலரை தொடர்ந்தும் பதவியில் நீடிக்கச் செய்யும் முகமாக, ஜனாதிபதி புஷ் நேற்று பென்ரகனுக்கு விஜயம் செய்தார்.

இவ்வாறு விஜயம் செய்த புஷ் பென்ரகனில் சேகரித்து வைக்கப்பட்ட வீடியோ பிரதிகளைப் பார்வையிட்டார்.

இதேவேளை, அமெரிக்க உபஜனாதிபதி டிக் சென்னி அமெரிக்க நாட்டிலேயே சிறந்த பாதுகாப்பு செயலர் ரம்ஸ் பீல்ட் எனத் தெரிவித்தார்.

ஆனால், இராணுவப் பத்திரிகையான ரைம்ஸ் தனது கருத்தில் கைதிகள் துன்புறுத்தல் விவகாரத்தையிட்டு ரம்ஸ் பீல்ட் பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டுமென தனது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

கைதிகள் தொடர்பான படங்கள் மேலும் வெளிவருவதை பென்ரகன் விரும்பவில்லையென நியூயோர்க் ரைம்ஸ் தெரிவித்தது.

அத்துடன், இவ்வாறான படங்கள் மேலும் வெளிவருவது குற்ற விசாரணைகளைப் பாதிக்குமென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். கைதிகள் துன்புறுத்தல் தொடர்பாக இதுவரை 7 அமெரிக்கப்படையினர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை
இன்றுமுதல்
விஜய், சிநேகா, நாசர் நடித்த
வசீகரா
(சி-2386)
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
The World is not enough

ராஜா யாழ்ப்பாணம்.
4 ஆவது வாரமாக
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி



காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
2 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த



அருள்
(றீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

Cambridge IELTS Training Project
ENGLISH
For
Professionals and Job-Visa seekers
Commencement
I.E.L.T.S 5th Batch 20.05.2004
Communication Skill 3rd Batch 24.05.2004
- Latest Modules with Hand Books
- Modern audio Cassettes and handouts
- Training-75% in Speaking Task
Accomodation Limited
Duration 4 Months
Success Assured.
(730)
Contact Coordinator
No.90, Nallur Cross Road
Nallur, Jaffna.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# படைத்தரப்பு - புலிகள் வவுனியாவில் சந்திப்பு!

விடுதலைப் புலிகளால் அண்மையில் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட ஞானவேல் நேற்று வவுனியா மாவட்ட படைத்தரப்பு மற்றும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

வவுனியா மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்றுமாலை இரண்டு மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் வவுனியா மாவட்ட அரசியறதுறைப் பொறுப்பாளர் ஞானவேல், முன்னாள் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் சஞ்சய் ஆகியோரும் -

படைத்தரப்பில் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜய சூரிய, கேணல் சேனநாயக்கா, வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.ஜே.மிஸ்கின் ஆகியோருடன் வவுனியா மாவட்ட கண்காணிப்புக் குழு பிரதிநிதி பி.எஸ். அப்துல்லாவும் கலந்துகொண்டனர்.

இரு பகுதியினருக்குமான நேற்றைய சந்திப்பு மாவட்டத்தின் புதிய அரசியற்துறைப் பொறுப்பாளரை அறிமுகப்படுத்தும் சந்திப்பாக அமைந்ததாக தெரிவிக்கப்பட்டது. (03)



வவுனியா போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று நடந்த சந்திப்பில் படை அதிகாரி, பொலிஸ் அதிகாரி மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் காணலாம்.

# தேர்தலை எதிர்கொள்வது குறித்து ரணில் தலைமையில் ஆராய்வு!

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றி பெறுவதற்கான ஏற்பாடுகள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளனர்.

நேற்றுக்காலை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியை புனரமைப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாகாணசபைத் தேர்தலில் அதிக வெற்றிகளைப் பெறுவதற்காகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட அதிகாரங்களை வழங்குவது என்றும் ஆட்சியைப் புனரமைப்பதற்கான அதிகாரங்களை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இவர்களிடம் புதிய வாக்காளர்களை இணைத்தல், விலகிசசென்ற வாக்காளர்களை கவருதல், புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளுதல் போன்ற பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் குறித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமை கட்சியின் நிறைவேற்றுக் குழு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளது.

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் அதிக வெற்றியீட்டுவது குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக முன்னாள் அமைச்சர்களான எம்.எச்.முகமட், எஸ்.பி. திஸநாயக்கா, ராஜித சேனாரத்ன ஆகியோர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் எடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (01)

# கிழக்கு நிலைகுறித்து...

தொடர்பாக ஆராய இராணுவ அதிகாரிகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றுக்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

வவுணதீவு பிரதேச செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப பொறுப்பாளர் சௌசல்யன் ஆகியோரும்,

இராணுவத் தரப்பில், 23 ஆவது டிவிசன் தளபதி பிரிகேடியர் வஜிர விஜய குணவர்த்தனவும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் - கலந்து கொள்வதற்காக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் புறூவ் ஹொவ்டே இன்று மட்டக்களப்புக்குச் செல்ல இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிவாரண முத்திரைகள்...

சுககளை நடத்தி வருவதாகவும் இம்மாத இறுதியில் இடம்பெறவுள்ள பிரதேச செயலர்களுக்கான கூட்டத்தின்போதே, தீர்க்கமான முடிவு அறிவிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் இலவச நிவாரண முத்திரைகள் நிறுத்தப்பட்டாலும் சமுர்த்தி நிவாரணம் தொடர்ந்து வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

# 13 வயது பாடசாலை மாணவி தூக்கில் தொங்கவிடப்பட்டு கொலை!

## மன்னாரில் நேற்று சம்பவம்

மன்னார் மாவட்டத்தில் மாணவி ஒருவர் அவரது வீட்டில் நேற்றுப்பகல் 11 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தூக்கில் தொங்கவிடப்பட்டு கொலைசெய்யப்பட்டுள்ளார் என தாம் சந்தேகிப்பதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி மாணவியான சாந்திபுரத்தைச் சேர்ந்த கோபால் - தர்சினி (வயது 13) என்ற சிறுமியே அவரது வீட்டில் தூக்கில் தொங்கவிடப்பட்டவராவார்.

வீட்டின் நடுப்பகுதியில் சிறுமியின் கழுத்தில் கயிற்றைப்போட்டு தொங்கவிடப்பட்டுள்ளது. சிறுமி முழங்கால் தரையில் முட்டியபடி இறந்துள்ளார். அத்துடன், சிறுமியின் கழுத்தில் நகங்களால் கீறப்பட்ட அடையாளங்கள் மட்டும் அவதானிக்கப்பட்டுள்ளது.

தாயும், மகளும் வசிக்கும் வீட்டில் தாய் மன்னார் நகரத்திற்கு சென்றுவிட்டு மீளவீட்டிற்க்குச் சென்றபோது, மகளைக் காணாததால் அருகிலுள்ள தனது தாயாரின் வீட்டிற்குச்சென்று அங்கு தேடியுள்ளார். அங்கு மகள் இல்லாத காரணத்தால் மீளவந்து வீட்டிற்குள்சென்றபோது, மகள் தூக்கில் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

இதன் பின்னர் அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மன்னார் பொ்லிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)

தகவல் தொழில்நுட்பப் பூங்கா
தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டிடம்
கச்சேரி முன்பாக, கண்டிவீதி, யாழ்ப்பாணம்
Phone: 021-2223641 Director:021-2223643
ITP

2004ஆம் ஆண்டின் 2ஆம் பருவத்திற்கான புதிய பிரிவுகள் ஜூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்க உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். பின்வரும் கற்கை நெறிகள் ஆரம்பிக்க உள்ளன. அதற்கான படிவங்களை தலைமையகத்திலும் மற்றும் கிளை நிலையங்களிலும் பெற்று பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.மே 25ஆம் திகதி முதல் கற்கைநெறிகளுக்கான கட்டணங்களைச் செலுத்தி நேர அட்டவணையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

Certificate Courses:-

* Computer Basic & Operating System
* MS-Word * MS-Excel
* AutoCAD * C/C++ * Java
* Visual Basic * Internet & E-mail

# சிறுமிக்கு கருக்கலைப்பு செய்த வைத்தியருக்குப் பிடியாணை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தையைப் பெற்றெடுத்து விட்டுத் தப்பிச்சென்ற சிறுமிக்கு சட்டவிரோதமாக கருக்கலைப்புச் [illegible]

விட்டுச் சென்றுள்ளார். இதனை அடுத்தே மறுநாள் சிறுமிக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. ஏதுமறியாத தாயார் சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்[illegible]

* Computer Basic & Operating System
* MS-Word * MS-Excel
* MS-Access
* PageMaker * CorelDraw

Duration:30 Hours
Course fee:1000/-

* AutoCAD * C/C++ * Java
* Visual Basic * Internet & E-mail
* HTML & Java Script

Duration:30 Hours
Course fee:1800/-

**Diploma Courses**

| | | |
|---|---|---|
| MS-Office | 5 Months | 2800/- |
| Hardware Technology | 6 Months | 3200/- |
| Desktop Publishing | 5 Months | 2400/- |
| Information Technology | 4 Months | 4750/- |

**Workshop Training**

| | | |
|---|---|---|
| PC Maintenance | 20 Hours | 1000/- |
| DeskTop Publishig | 20 Hours | 1000/- |
| Internet & E-mail | 20 Hours | 1000/- |
| Multimedia | 20 Hours | 1000/- |

**தலைமையகத்தில் நடைபெறும்**
**Diploma Courses**

| | | |
|---|---|---|
| PC Application | 3 Months | 2750/- |
| Computer Programing | 6 Months | 5500/- |
| Internet Technology | 5 Months | 4500/- |
| Multimedia | 6 Months | 5500/- |

**Computer Studies for Children**

| | | |
|---|---|---|
| Computer Awareness | 15 Hours | 250/- |

Registration Fee:250/- for all the courses & Workshop

கிளை நிறுவனங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கீழ்வரும் இடங்களில் பெற்று பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

வடமராட்சி : பிரதேச சபை, மாலிசந்தி, கரவெட்டி
வலிகாமம் : J/133 கிராம அலுவலர் பணிமனை, ஆனைக்கோட்டை (சந்திக்கருகில்)
தென்மராட்சி : பிரதேச செயலகம், சாவகச்சேரி.

தகவல்: பணிப்பாளர்


யாழ்.போதனா வைத்தியசாலையில் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டுத் தப்பிச்சென்ற சிறுமிக்கு சட்டவிரோதமாக கருக்கலைப்புச் செய்ததாக சந்தேகிக்கப்படும் வைத்தியரைக் கைதுசெய்யுமாறு யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று பிடியாணை பிறப்பித்தார்.

கடந்த 5 ஆம் திகதி வயிற்றுவலியெனக்கூறி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மருந்தெடுக்க வந்த 16 வயதுச் சிறுமிக்கு குறைப் பிரவசமானதில் குழந்தையை யாழ்.போதனா வைத்தியசாலை கழிவறையில் போட்டுவிட்டு தாயுடன் தலைமறைவாகியிருந்தார்.

இதனையடுத்து, யாழ்.பொலிஸாரால கைதுசெய்யப்பட்ட மேற்படி சிறுமியும், அவரது குழந்தைப் பிரசவத்துக்கு காரணமான திருமணமான குடும்பஸ்தரும் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, தமது குற்றத்தினை ஒப்புக்கொண்டனர்.

இவர்கள் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை பிற்போடப்பட்டு அவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சிறுமி கருவுற்றிருப்பதை உணர்ந்துகொண்ட - கருவிற்கு காரணமானவராக சந்தேகிக்கப்படும் காதலன் அவரை அழைத்துச் சென்று நாவாந்துறைப் பகுதியில் உள்ள தனியார் கிளினிக்கில் கருக்கலைப்பிற்கான மருந்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதன் பின்னரே சிறுமியைக் கொண்டுசென்று அவரது வீட்டில் விட்டுச் சென்றுள்ளார். இதனை அடுத்தே மறுநாள் சிறுமிக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. ஏதுமறியாத தாயார் சிறுமியை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அவ்வேளையிலேயே குறிப்பிட்ட இக்குறைப் பிரசவம் நடைபெற்றுள்ளது.

இவையாவும் விசாரணை மூலம் தெரியவந்துள்ளதை அடுத்தே, நீதவான் கருக்கலைப்பு மருந்து கொடுத்த வைத்தியரை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம சிறுமி ஒருவரை தீவுப்பகுதிக்கு கூட்டிச் செல்லமுற்பட்ட சமயம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட நபர் தன்னைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறுகோரி யாழ்.நீதிமன்றில் சமர்ப்பித்த மனு நேற்று நிராகரிக்கப்பட்டது. (ப)

## சபை முதல்வராக மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஆற்றுவள அபிவிருத்தி மற்றும் ரஜரட்டை அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன 13 ஆவது நாடாளுமன்ற சபை முதல்வராக நேற்று நியமிக்கப்பட்டார்.

நேற்று சபை முதல்வராக நியமிக்கப்பட்ட சிறிசேன இன்று பதவியை ஏற்கவுள்ளார்.

இதேவேளை - சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியான தர்மசிறி விஜயசிங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அமைச்சரவைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.5.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.